# நேற்றைய றிசேர்வ் பொலிஸ் நேர்முகப் பரீட்சை 21பெண்கள் யாழ் பொலிஸ் நிலையம் வந்தனர்


## 116 பேர் தெரிவாகியுள்ளனர்

றிசேர்வ் பொலிஸ் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ் பொலிஸ் நிலையத்தில் ஆரம்பமாகியது இந்த நேர்முகப் பரீட்சையில் 150 ஆண்கள் கலந்து கொண்டனர் இவர்ளில் 102 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் பிரிவில் 21 பேர் கலந்து கொண்டனர் இவர்களில் 14 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். யாவரும் பங்கு பற்றலாம் என்ற அறிவிப்பின் கீழ் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் நேற்று யாழ் பொலிஸ் நிலையத்தில் விண்ணப்ப பத்திரங்களைப் பெற்றுச்சென்றுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை சில தினங்களில் நடைபெறவுள்ளது. (03)

பக்கங்கள் பத்து விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 75 சனி 21-04-1990 (சித்திரை 08) ரமழான் 24



# பிரபா - பாலகுமார் யாழ்நகரில் சந்திப்பு



## நேற்று முன்தினம் வியாழன் நடைபெற்ற முதற்கட்டப் புரிந்துணர்வுச் சந்திப்பு

விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் ஈரோஸ் இயக்கப்பொதுச் செயலர் வே. பாலகுமாரன் நேற்று யாழ்நகரில் சந்தித்து உரையாடினர் இரண்டரை வருடங்களுக்குப்பின் இரு இயக்கத் தலைவர்களும் சந்தித்துக் கொண்டது இதுவே முதல் தடவை என்று ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன



பிரபாகரன் பாலசிங்கம்



பரராஜசிங்கம் பாலகுமார்

இரண்டரை மணிநேரம் சுமுகமாக நடைபெற்ற இப் பேச்சுகளில் முதல் ஒரு மணி நேரம் பிரபாகரனும் பாலகுமாரனும் தனித்தே உரையாடினர். மீதிநேர சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சார்பில் யோகி, பாலசிங்கம் ஆகியோரும் ஈரோஸ் சார்பில் பரராஜசிங்கமும் கலந்துகொண்டனர் இரு இயக்கங்களினதும் எதிர்கால நல்லுறவு குறித்த புரிந்துணர்வின் அடிப்படையிலான ஆரம்பகட்டபேச்சுகளாக இது அமைந்ததாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இயக்க நல்லுறவு, வடகிழக்கு அரசியல் நிலை, ஆறுவது திருத்தச்சட்டமூலம் என்பன குறித்து பேச்சுகளின் போது கருத்து பரிமாறப்பட்டது.

இது ஓர் ஆரம்பக் கட்ட நல்லுறவு சந்திப்பு எனவும் சந்திப்புகள் தொடரும் எனவும் அவ் வட்டாரங்கள் கூறின.

## உள்ளே

பிரபாகரன் இருக்குமிடம் தமிழீழம்
6-ம் பக்கம்

புனித பிரதேசமான கீரிமலையில நல்லெண்ணை போத்தல் நடுவே சாராயம் நேரடி றிப்போட்
3-ம் பக்கம்

## வடக்கில் சிறுவர்கள் மூலம் பிற்போக்கட் அடிக்கும் கும்பல்

இதுவரைகாலமும் வடபகுதி ரயில்களில் பிற்பொக்கட் அடித்துவந்த ஒரு குழுவின் 10 வயதுச்சிறுவன் கையும் மெய்யுமாக யாழ்புகையிரத நிலையத்தில் வைத்து பிடிக்கப்பட்டிள்ளார்.

இவர் ஒரு பெண்ணிடம் திருடமுயன்றபோதே பிடிக்கப்பட்டுள்ளார். இவரை முரசொலி நிருபர் விசாரித்த

—10 ஆம் பக்கம் பார்க்க

## பஸ் வண்டிகளை சீர்செய்ய 3 லட்சம் ரூபா ஒதுக்கீடு

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள போக்குவரத்து பஸ் வண்டிகளை சீர் செய்வதற்காக 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்து அமைச்சர் விஜேபாலமென்டிஸ் இதற்கான உறுதியை அளித்துள்ளார்,

இதன் மூலம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் போக்குவரத்துச் சேவைகள் மறுசீரமைக்கப்படும். மேலும் 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட வேண்டுமென அமைச்சிடம் கேட்கப்பட்டுள்ளது. 3)

## ரெலிபோன் உத்தரவு எழுத்தில் வராததால் இன்னமும் 30 தோணிகள் மட்டு செயலகத்தில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணசபையின் கடற்றொழில் அமைச்சினல் வழங்கப்பட்ட 45 தோணிகள் மட்/ கச்சேரியில் கடந்த ஒரு வருடத்திற்குமேலாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது.

கச்சேரி வளவினுள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இத் தோணிகள் வெயிலிலும் மழையிலும் நனைந்து பராமரிப்பு அற்றுகாணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வருட காலமாகியும் இததோணிகளை மீன்வர்களுக்கு ஒப்படைக்காமை குறித்து அதிருப்தி தெரிவிக்

— 10ம் பக்கம் பார்க்க

## கடலில் வெடிவைத்து மீன பிடிக்க விடுதலைப்புலிகள் தடை

கடல் வளத்தை பேணவும் தொழிலாளர்களின் நன்மை கருதியும் யாழ் மாவட்ட விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினர் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக கடலின் எப்பகுதியிலும் வெடிபோட்டு மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இது அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வருவதாகவும். இதை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவித்துள்ளனர் (03)

## இந்தியப்படையின் மின்பாவனை கிளிநொச்சியில் 19 லட்சர்ரூபா

கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்தியப்படையினர் கிளிநொச்சியில் தங்கியிருந்த காலத்தில் அவர்கள் உபயோகித்த தற்கான மின்சாரக் கட்டணத்தை பாதுகாப்பு அமைச்சே பொறுப்பேற்றுள்ளது,

கிளிநொச்சியில் இந்தியப் படையினர் பாவித்தமைக்கானமின்கட்டணம்பத்தொன்பது லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வென கிளிநொச்சி பிர

—10 ஆம் பக்கம் பார்க்க

### மூன்று வருடங்களின் பின்

# யாழ் பொது நிகழ்ச்சியில் நாளை மறுதினம் மாத்தயா

நாளை மறுதினம் யாழ் முற்ற வெளியில் நடைபெறும் தேனிசை செல்லப்பாவின் தமிழீழ எழுச்சிப்பாடல்கள் நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா உரைநிகழ்த்துவார்.

மூன்று வருடங்களின் பின் மாத்தயா யாழ் நகரில் பொது மக்களிடையே உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகி, தலைமை செயற்குழு உறுப்பினர் காசிஆனந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்,

தேனிசைச் செல்லப்பாவின் எழுச்சிப் பாடல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியுள்ள விடுதலைப்புலிகளின் கலாச்சார பிரிவினர் விசேட பேக்குவரத்துச்சேவைகளையும் ஒழுங்கு செய்துள்ளனர்.

## சிறு விளம்பரம்

**தேவை**

ரீ மேக்கரும் 2 சப்ளேயர்கள் பெண்கள் உடனடியாகத் தேவை. தேவை எனில் தங்குமிடம்கொடுக்கப்படும். முகவரி: அருள் கூப்பார் பரந்தன். 04196


# டிப்ளோமா பயிற்சி நெறி தமிழில் நடாத்தக் கோரிக்கை

வடக்கு கிழக்கு பிராந்தியங்கள் தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களிலுள்ள திறந்த பல்கலைக் கழகங்களிலும் பட்டப் பின்படிப்புக்கலவி டிப்ளோமா பயிற்சி நெறியை தமிழ்மொழியிலும் நடாத்துவதற்கு ஆவன செய்யும்படியும் மேலும் வடக்கு கிழக்குப்பிராந்தியங்களில் இவற்றை சிறப்பான முறையில் நடைபெறச் செய்யும்படியும் வடபிராந்திய திறந்த வெளி பல்கலைக்கழக டிப்ளோமா மாணவர்கள் சங்கம் ஜனாதிபதியை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நடாத்தப்படும் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தேர்வு முறையில் தனியார் கல்லூரிகள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் கல்வி கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் சணிசமான அளவு தெரிவு செய்யப்படுவதால் தேசிய ரீதியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒருபாதகமான அம்சம் இதுவென்றும் இது தேசிய ரீதியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு பாதகமான செயலாகும் என்றும் அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போக்குவரத்துசபை அதிகாரிகள் வடம. கிழக்கிற்கு விஜயம்

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு சமீபத்தில விஜயம் செய்தது.

உத்தேசிக்கப்பட்ட யாழ். ஆழியவளை பஸ்சேவை வெற்றிலைக்கேணிக்கு நீடிக்கப்படுவது சம்பந்தமாக பொது மக்களின் அபிப்பிரயங்களை நேரில் கண்டறிவதற்காக செயலாற்று முகாமையாளர் கோண்டாவில் சாலை அத்தியட்சகர் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்று பொது மக்களையும் பொதுஸ்தாபனப் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினர்.

ஏற்கனவே உத்தேசிக்கப்பட்ட பஸ்சேவை நீடிப்பு சம்பந்தமான வடமராட்சி கிழக்கிலுள்ள பொதுஸ்தாபனங்கள் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்தே உயர் அதிகாரிகள் குழு அப்பகுதிக்குச் சென்றது.

மக்கள் வாழும் பகுதியைத் தவிர்த்து மக்கள் வாழாத பகுதிக்கூடாக பஸ்சேவை நீடிக்கப்படுவதை அப்பகுதியில் உள்ள பொதுஸ்தாபனங்கள் எதிர்த்து வந்துள்ளன. அத்துடன் வெற்றிலைக்கேணிக்கு பஸ்சேவை நீடிக்கப்படுவது மிகவும் அவசியம் எனவும் ஆனல் அரித பஸ்களை ஆழியவளை வெற்றிலைக்கேணி கடற்கரை வீதிக்கூடாகவே நீடிக்கப்படவேண்டும் என்றும் அப்பகுதிப் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (43)


ஊ

## 31-ம் நாள் நினைவஞ்சலி

உரும்பிராய்

திரு. அப்புக்குட்டி ஆச்சிக்குட்டி
தம்பதிகளின் புதல்வியும்
காலஞ்சென்ற திரு. க. இராசரத்தினம் அவர்களின்
பிரிய பத்தினியுமான

**திருமதி இராசம்மா அம்மையார்**

(சிறம்பான் மலேசியா)



மலர்வு 19 : 05 . 1914

உதிர்வு 22 . 03 . 1990

22. 03. 1990 வியாழக்கிழமை சிறம்பானில் (மலேசியா) சிவபதம் அடைந்த திருமதி இராசம்மா இராசரத்தினம் அம்மையாரின் ஆன்ம சாந்திக்கிரியைகள் இன்று 21. 04. 1990 சனிக்கிழமை காலை கீரிமலையில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்தியின் பொருட்டு உரும்பிராய் ஞானசம்பந்தர் இல்லத்தில் நண்பகல் பிரார்த்தனை இடம்பெறும். தொடர்ந்து மாகேசுவர பூசை நடைபெறும்.

குணரத்தினம், குலசிங்கம், யோகராசா, தவமலர், சத்தியகாந்தன் (பிள்ளைகள்)

தயாமணி, மெடிலின், வசந்தா, லோகநாதன், சரஸ்வதி (மருமக்கள்)

இரத்தினம், கனகம்மா, பவளம்மா, நல்லதம்பி, பூபாலசிங்கம், பொன்னம்மா (சகோதரர்கள்)

மற்றும் பேரப்பிள்ளைகளும், மைத்துன மைத்துனிகளும் உற்ருர், உறவினர்களும்

மானிப்பாய் வீதி
உரும்பிராய்

தகவல்: அ நல்லதம்பி
புனிதவதி நல்லதம்பி
04201



## முதலாண்டு நினைவஞ்சலி



**அமரர் திருமதி அன்னபூரணம் கனகநாயகம் அவர்கள்**

ஆண்டவன் படைப்பு 1950-01-08

அந்நியன் பறிப்பு 1989 04,21

திதி
10.5.1990

மறைந்த சூரியன் மறுபடி எழ
மணித்தியாலம் பன்னிரண்டு போதுமே எம்மில்
நிறைந்த சூரியனே உனது நித்திரை
நீங்கப் பன்னிரு மாதம் போதாதா அம்மா?
தண்ணீரில் நாம் நின்று விளையாடும்போது
தடிமன் வருமெனத் தவிக்கின்ற நீ
கண்ணீரில் நின்று நாம் கதறும் போது
கண்ணயர்ந்து தூங்குவதேன்?—
காதுகளை மூடுவதேன்?
தினங்கள் முப்பது முடியும் வேளை
திங்கள் வளர்ந்து பூரணை ஆகும்
மனங்கள் அழுவதும் சனங்கள் தொழுவதும்
மறுபடி எப்போதெம் பூரணியாகும்?

பண்ணாகம்,
சுழிபுரம்,
1990.4 21

குடும்பத்தினர்

4200


## ஆதீனத்தில் கவியுனை அரங்கு

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் வாரந்தோறும் நடைபெற்று வரும் முத்தமிழ்க்கவி புனை அரங்கு இனிச் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியர் அருளாணையின் பேரில் கௌரவப் பொறுப்பாளர் சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை மேற் கொண்டிருக்கிருர். புதுக்கவிதை, கவிநயமறிதல் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## உங்களுடையதா?

சந்தரோடையைச் சேர்ந்த கிருஷ்ணன் யகதீஸ்வரன் என்பவருடையதேசிய அடையாள அட்டையும் மற்றும் முக்கிய சான்றிதழ்கள் பலவும் ஸ்ரான்லி விதியில் வைத்து விக்ஞ மோட்டோர்ஸ் உரிமையாளரினல் நேற்று கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில் அலுவலக நேரத்தில் அடையாளம் காட்டிப்பெற்றுக் கொள்ளலாம்.


UNIVERSITY OF JAFFNA

**TENDER FOR FURNITURE**

Reference to the above advertisment ou 30 03.90 and 8 04 90 the closing date of the Tender is extended up to 24 04.90. Last date for collection of Tender Form is extended upto 11.04 90.

Tender will be opened at 2.30 p.m. on 24 4.90 in the Board Room of the University of Jaffna.

Registrar
University of Jaffna.

04202

## கொடுமை... கொடுமை இளமையில் வறுமை

இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் படித்துவிட்டு வேலையின்றி உள்ளனர்.

இன்றைய இளைஞர்களின் விரக்தி நிலைக்கு இதுவும் ஒரு காரணம் என்று இளைஞர்களின் அமைதியின்மை குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு படித்த இளைஞருக்கு வேலையில்லாதது ஒரு புறம் இருக்க, சிறு வயதில் வறுமையால் பள்ளிக்குச் செல்லாது வேலைக்குச் செல்லும் சிறுர்கள் ஆயிரக்கணக்கில் இலங்கையில் உள்ளனர்.

- கடந்தகால அசம்பாவிதங்களால் வடக்கு-கிழக்கில் முப்பதாயிரம் சிறுர்கள் அனாதைகளாக்கப் பட்டுள்ளனர் என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

இவர்கள் இன்று வடக்கு - கிழக்கில்தான் உள்ளனர்.

இவர்களில் ஒரு சிலரே நல்ல பாதுகாவலர்களின் கைகளிலும், அனாதை விடுதிக் காப்பாளரிடமும் போயுள்ளனர்.

அவர்களின் கல்வி, எதிர்காலம் என்பவற்றிற்கு ஓரளவு உத்தரவாதம் உள்ளது.

ஆனால், எண்பது வீதமான சிறுர்கள் கல்வி வசதியின்றிப் பல வீடுகளில் வேலைக்காரர்களாக, அடிமைகளாக உள்ளனர்.

இன்னும் சிலர் தேநீர்க் கடைகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றிலும், ரொபி, பக்கற்றிலடைக்கும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர்.

பள்ளிக்குச் செல்லும் வயதில் இவர்களை வேலைக்கு அனுப்புவது, சேர்ப்பது மிகவும் தவறாகும்.

இதே நிலையில் இன்னும் ஆயிரக்கணக்கான சிறுர்கள் வறுமையால் பள்ளிக்குச் செல்லாது வேலைக்குச் செல்கின்றனர்.

இவர்கள் வன்செயல்களால் அனாதைகளானவர்களல்லர்.

இவர்களைப் பெற்றெடுத்த இந்தியாவும், தத்தெடுத்த இலங்கையும் கைவிட்டதால் இந்த அவலநிலைக்கு உள்ளானவர்கள்.

இவர்கள் தான் மலைநாட்டுச் சிறுர்கள்.

இவர்களிடம் கல்வியறிவானது பத்து சதவீதம்கூட இல்லை எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இவர்களில் பெரும் தொகையானோர் இன்று வட பகுதியிலேயே வேலைக்காரச் சிறுவர்களாகவுள்ளனர்.

மலைநாட்டு மாணவர்களின் கல்வி நிலையை அபிவிருத்தி செய்ய மலையகக் கல்வி அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

மலையக மாணவர்கள் மத்தியில் உயர் கல்வி ஆர்வத்தை வளர்க்கவும், பல்கலைக் கழகம் செல்லும் மலையக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவும் உதவவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்வித்துறையின் பின்தங்கியுள்ள மலையகத்தில் மூலை முடுக்கெல்லாம் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வரவேண்டும்.

மாணவர்களின் கல்வி நிலையை அதிகரிக்கச் செய்வதற்கு முன், வேலைக்குச் செல்லும் சிறுர்களை மாணவர்களாக்க வேண்டியது அரசினதும், சமூக நலனில் அக்கறையுள்ளவர்களினதும் கடமையாகும்.

ஐக்கிய நாடுகள்சபை இந்த ஆண்டைச் சர்வதேச எழுத்தறிவு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டிலாவது; ஏழைச் சிறுர்களுக்கு மதிய உணவுமுறை கொண்டுவந்த ஜனாதிபதியின் ஆட்சியிலாவது; வறுமையின் பிடியிலுள்ள ஏழைச்சிறுர்கள் மாணவர்களாக மாறுவார்களா.

## இதயநாதம்

சனிக்கிழமை 21-04-1990

நல்வரக்கு

உங்களில் ஒருவர் மற்றவர்களின் பொருட்களை அநியாயமாக எடுக்காதீர்கள். இதனால் உங்களை நீங்களே அழித்துக் கொள்கிறீர்கள்.

-திருக்குர்ஆன்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

கீரிமலைக்கேணி, கடற்கரைக்கு ஒரு நேரடி விசிட் (1) ★ ★ ★ ★ ★ ★

# புனித பிரதேசமான கீரிமலைக்கேணியடி கடையில்

# நல்லெண்ணைப் போத்தல் நடுவே சாராயப்போத்தல்

''தம்பி அங்க பார் பொம்பிளையள் குளிக்கிற வேடிக்கை பாக்கிற வடிவ... இதுகளுக்கும் பெண் சகோதரம் இல்லைய...''பொடியள் பாக்கிறுங்கள்...நாங்கள் இப்படி அரை நிர்வாணமாய் கடலுக்க நிண்டு குளிக்கக் கூடாது. எண்டு இந்தக் காலத்து பெண் பிள்ளையள் நினைக்குதுகளா...'' என்று முணுமுணுத்தார் கீரிமலையில் பனங்கட்டிக் குட்டான் விக்கும் இளைய பிள்ளை ஆச்சி.

''பொம்பிளையளுக்கு குளிக்கிறதுக்கு ... புறம்பா கேணி இருக்குது... ஆனால் அவையள் கடலுக்குள்ள குளிக்கிற ஆசையில் பொம்பிளைக் கேணியைப் பயன் படுத்திறேல்ல ...'' கடலுக்க பொம்பிளையள் குளிக்கிறதையும் மதில் கரையில உடுப்பு மாத்திறதையும் எங்கட இளவட்டங்கள் பாத்து ரசிக்குதுகள்...இந்தக்கண்ராவியள ஆரட்டபோய் சொல்லுறது ... என்று கூறியபடி பெருமூச்சு விட்டார் கீரிமலையில் வசிக்கும் மணியம் என்ற பெரியவர்.

நாம் இந்தக்காட்சியை எப்படியும் கமெருவக்குள் புகுத்தி விட முயற்சித்தோம் ... ஒரு வாலிபன்... ஓடிவந்து படம் பிடிப்பதை தடுத்து நிறுத்த முயன்றுன் ...அவரது முயற்சி வெற்றியளிப்பதற்குள் கமெரு தனது வேலையை கச்சிதமாக முடித்துவிட்டது.

பெண்கள் கீரிமலைக் கடலில் குளிக்கிறுர்களா? நீங்கள் என்ன கதையைச் சோடிக்கின்றீர்களா...? பெண்கள் குளிப்பதற்கு கேணி புறம்பாக இருக்கும் போது அவர்கள் ஏன் கடலில் குளிக்கிறுர்கள்?

பொய் சொல்வதற்கும் அளவே இல்லையா? என்று நீங்கள் கேட்கக்கூடும். இக் கேள்விகள் எழக்கூடாது என்பதற்காகவே பெண்கள் கடலில் குளிக்கும் காட்சியை படம் எடுத்தோம்— நாம்படம் பிடித்த காட்சிகளில் சில காட்சிகளை மட்டும்தான் இங்கு பார்க்கிறீர்கள்.

### உதரன்

### புனித பிரதேசம் மனித நாசம

கீரிமலை புனிதமான பிரதேசம். ஆலயங்கள் சூழ உள்ள இடம். அதனை புனிதமாகப் பராமரிக்க வேண்டியது எமது கடமையாகும். பாடப் புத்தகங்களில் கூட கீரிமலையின் பெருமையைப் பற்றி படிக்கிறேம். அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலையை புனிதம் கெடச் செய்வதை எந்த ஒரு தமிழ் மகனும் ஏற்றுக்கொள்ள முடியாது.

கீரிமலையில் 35 வருடங்கள் கேணி பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றிய சின்னத்துரை எம்மிடம் கருத்து தெரிவிக்கையில் அன்று நான் பார்த்த கீரிமலைக்கும் இன்றைய கீரிமலைக்கும் இடையே நீண்ட இடைவெளி தெரிகிறது.

அக்காலத்தில் கீரிமலைக்கு பக்தியோடுதான் மக்கள் வருவார்கள். கீரிமலை கேணியில் நீராடுவார்கள். ஆண்கள் தான் கடலில் நீராடுவது வழக்கம். இப்போது பெண்ளும் கடலுக்குள் இறங்கி நீராடுகிறுர்கள். மதில் கரையிலேயே உடைகளையும் மாற்றுகிறுர்கள்...

இப்போதைய பிள்ளைகளுக்கு புத்திமதி சொல்ல முடியாது. பெரியவர்களின் கருத்தை அலட்சியம் செய்யும் மனப்பான்மையே அவர்களிடம் காணப்படுகிறது.

### பாத அணிகளை கேணி நீரில் கழுவுகிறுர்கள்

அன்று கீரிமலைக்கு நீராட வருவோர்... கேணிக்கருகில் கூடப் பாத அணிகளைக் கொண்டு செல்வதில்லை ஆனால் இப்போது கேணிககுள் பாத அணிகளைக் கழுவுகிறுர்கள்... நிலைமை எப்படி மாறிவிட்டது என்று பார்த்தீர்களா?... என்றுர் வேதனையோடு.

### நேரடி ரிப்போர்ட்

கீரிமலைக்கு யார் வேண்டுமானாலும் வரலாம், வழிபடலாம், இளைப்பாறலாம்... ஆனால் புனிதத் தன்மையைச் சிதைப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை... அந்த உரிமை எவருக்கும் கொடுக்கப்படவுமில்லை.

### மது மாமிசம்

கீரிமலை மண்டபத்தில் வைத்து மாமிச உணவுவகைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களையும் எம்மால் காணமுடிந்தது.



குளிக்கும் பெண்கள்

அதேவேளை கீரிமலையை ஒரு கேலிக்குரிய இடமாக இளைஞர்கள் மாற்றிவருகின்றனர். கிழமை நாட்களில் பாடசாலை மாணவர்கள் வருகிறுர்கள். நீராடுகிறுர்கள், மனம்விட்டு உரையாடுகிறுர்கள்... உயர்தர வகுப்பு மாணவர்கள் இத்தோடு நின்று விடவில்லை. இறைச்சிக் கறியோடு,பாணுடனும் கையிலே போத்தலுடனும் கீரிமலையிற் காட்சி தருகின்றுர்கள்...

கீரிமலை புனிதமான இடம் என்று குடிபோதையில் இருப்பவர்களிடம் சொல்ல முடியுமா...? குடிபோதையில் இருப்பவர்களுக்குத் தமது மகிழ்ச்சியே முக்கியம்... எமது சமுதாயத்தைப் பற்றியோ... எமது கலாசாரப் பெருமைகளைப் பற்றியோ அக்கறையில்லை. எங்கள் தேவை குடி...

பாடசாலை மாணவர்களுக்கே கீரிமலையின் மகிமை புரியவில்லை என்றுல்... வேறு யாருக்குப் புரியும்?

### கடைகளில் சாராயம்

கீரிமலையைச் சுற்றியுள்ள கடைகள் பலவற்றில் சாராயம் விற்கப்படுகிறது சாராயம் விற்கும் காட்சியை நாம் நேரடியாகவே கண்டோம்.

கோவில் அருகே இருக்கிறது... பஞ்சமாபாதக வேலைகளும் குறைவில்லாமல் நடக்கின்றன... கசிப்பு விற்பனை போராளிகளால் தடை செய்யப்பட்டுள்ளதால்... அதனை விற்பனை செய்யச் சட்ட விரோத விற்பனையாளர்களால் முடியவில்லை.

இப்போது சில் சாராய விற்பனையில் இறங்கியுள்ளார்கள். கீரிமலையில் உள்ள கடை ஒன்றில் நல்லெண்ணைப் போத்தல்களோடு சாராயப் போத்தல் இருப்பதைக் கண்ட நாம்... நல்லெண்ணை வேறு நிறமாக இருக்கிறதே... நல்லெண்ணையின் நிறத்திலும்...பாரிய வேறுபாடு இருக்கிறதா.... என்று கடைக்காரரிடம் கேட்டோம்...

கடைக்காரர் திரு திருவென விளிக்கத் தொடங்கினுர்... அவரது செய்கையே அவர் சாராயம்விற்கிறுர் என்பதைச் சுலபமாக வெளிப்படுத்திவிட்டது.

ஒரு கடையின்...பெண் முதலாளி அம்மா...''சாராயம் இருந்தாத்தான் கடைகளுக்கு வியாபாரம் நடக்குது .. இதுல நாங்களும் சாராயத்த வேறு வழியிலலாம விற்க வேண்டியிருக்கிறது.

''எல்லாக் கடையிலும் மற்றச் சாமான்களின் விற்பனையி

—8ஆம் பக்கம் பார்க்க



பார்க்கும் கண்கள்

## வாழ்த்துவோர்

**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**
74/ 1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**ரும் சேது & கோ**
பிரபல வர்த்தகர்கள் & முகவர்கள்
32, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

**எஸ். ஈ. பஞ்சாச்சரம்**
பிரபல வர்த்தகர்
402/6 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்

**வீரசிங்கம் ஸ்ரோர்ஸ்**
4 கடற்கரை வீதி
பாஷையூர்

**எம்: சிவசுப்பிரமணியம் செட்டியார்**
15/19 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்

**றேடியன்ட் இன்ஷ்ரிரியூட்**
புங்கன்குளம்
யாழ்ப்பாணம்

**லக்கி ஸ்ரோர்ஸ்**
ஏ. செபஸ்தியாம்பிள்ளை
பாஷையூர் யாழ்ப்பாணம்

**மெடி கெயர் கிளினிக்**
கண்டி வீதி யாழ்ப்பாணம்

**தவம் ஸ்ரோர்ஸ்**
ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்

**சென். அந்தனீஸ்**
63 யூதா கோவில் வீதி பாஷையூர்

**செல்வம் கொன்ருக்ரஸ்**
யாழ்ப்பாணம்


# யாழ். உதைபந்தாட்

# 40-வது ஆண்

### யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்
## சங்கத்தலைவரின் செய்தி

மத்தியஸ்தர் நேர்மை உள்
ளவராக இருந்தால் மட்டும்
போதாது தேக ஆரோக்கி
யம் உள்ளவராகவும் இருத்
தல் அவசியம் அவர் தீர்ப்
பில் உறுதி வேண்டும். தன்
நம்பிக்கை வேண்டும். இவற்
றிற்கு விளையாட்டு விதிகளை
நன்கு அறிந்திருத்தல் வேண்
டும். எல்லாவற்றிற்கும்
மேலாக உடன் தீர்ப்பு உறுதி
யுடன் எடுக்க வல்லவரா
யிருத்தல் வேண்டும்.

யாழ் உதைபந்தாட்ட மத்
தியஸ்தர் சங்கம், ஸ்ரீலங்கா
மத்தியஸ்தர் சங்கத்துடன்
இணைந்த சங்கமாகும். அண்
மையில் இத் தாய்ச் சங்கம்
மேற்கொண்ட ஆய்வொன்றில்
ஏனைய மத்தியஸ்தர் சங்கங்
களிலும் பார்க்க யாழ். உதை
பந்தாட்ட மத்தியஸ்தர் சங்
கம் மிகவும் சிறப்புடன் செய
லாற்றி வருவதாகக்கண்ட
றிந்து கூறியுள்ளது. இப்
பெருமை இச்சங்கத்தின் வளர்
ச்சிக்கு அன்றும் இன்றும்
அரும்பாடு பட்டு உழைத்து
வரும் யாவருக்கும் பெருமை
தருவதொன்றாகும்,

இச்சங்கம் 1949-ம் ஆண்டு
நவம்பர் 21ம் திகதி திருவா
ளர்கள் P, சிறிஸ்கந்தராசா
(உயர் நீதி அரசர்) P. R
மோத்தா E சபாலிங்கம்
R, சிவதாசன் R, J துரைராசா
M. ரொசாறியோ V சுப்பிர
மணியம் E F தேவசகாயம்
P தியாகராசா S, கந்தையா
ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்
டது அக்காலங்களில் மத்தியஸ்
தர்களாகப் பணிபுரிந்தோர்
படித்துப் பட்டம் பெற்றவர்
களாகவும் அரசாங்கத்தில்
கௌரவமான பதவிகளை வகித்
தவர்களுமாக இருந்ததினால்
சில சமயங்களில் இவர்களால்
போட்டிகட்கு மத்தியஸ்தம்
வகிக்க சந்தர்ப்ப சூழ்நிலைகள்
இடம் கொடுக்கவில்லை இதன்
காரணமாக சில போட்டிகள்
பின் போடப்பட்டமையும்
உண்டு

இச் சூழ்நிலையை நன்கு
உணர்ந்த அன்றைய சங்கத்
தலைவர் கழகங்களின் பிரதி
நிதிகளையும் விளையாட்டுத்
துறையில் ஈடுபாடு உள்ள
வர்கள் பாடசாலை உடற்கல்வி
ஆசிரியர்கள் ஆகியோரை
அணுகி புதிய அங்கத்தவர்
களாகச் சேர்க்கும் பணியில்
ஈடுபட்டார் அவர் முயற்சி
வீண் போகவில்லை

உதைபந்தாட்ட மத்தியஸ்
தர்சங்கங்கள் அந்தந்தமாவட்
டங்களில் செயற் படும் லீக்
சங்கங்களுடன் இணைந்தே
செயற்பட வேண்டும் ஆனால்
1976ம ஆண்டுவரை நமது
சங்கம் யாழ் உதை பந்தாட்ட
சங்கத்துடன் இணைவதற்கு
எந்தவித நடவடிக்கையும்
எடுக்கவில்லை மேலும் அக்கா
தில் உதைபந்தாட்டம் கரப்
பந்தாட்டம் மெய்வல்லுநர்
போட்டி ஆகிய மூன்றிற்கும்
ஒரு சங்கமே இருந்தது
என்பது இங்கே குறிப்பிட
வேண்டியது ஒன்றாகும் ஆனால்
சிறீலங்கா உதைபந்தாட்ட
சங்கம்உதைபந்தாட்டத்திற்கு
தனியாக ஒரு சங்கத்தை உரு
வாக்க வேண்டுமெனவும்,
அவ்வாறு செய்யாவிட்டால்
உதைபந்தாட்ட லீக் சங்கம்
எந்தவித முன்னேற்றமும்
அடையமுடியாது எனவும்
சுட்டிக்காட்டியது. அதன்ப
யனாக உதைபந்தாட்ட சங்கம்
பல எதிர்ப்புகள் மத்தியில்
ஸ்தாபிக்கப்பட்டது இருந்தும்
உதைபந்தாட்ட மத்தியஸ்தர்
சங்கம் அதனுடன் இணையாது
தனித்தே இயங்கியது இதனால்
இரு சங்கங்களுக்குமிடையில்
ஏற்பட்ட ஏற்றத்தாழ்வின்
நிமித்தம் பல உதைபந்தாட்ட
போட்டிகள் ரத்துச் செய்யப்
பட்டதும் உண்டு,

இன் நிலையில் 1976ம் ஆண்டு
ஒக்ரோபர் மாதம் சிறிலங்கா
உதைபந்தாட்டச்சங்கத்தினால்
அனுப்பப்பட்ட சுற்று நிரு
பத்தின் படிசகல மத்தியஸ்தர்
சங்கங்களும் லீக் உடன்
இணைந்தே செயற்பட வேண்
டுமஎன்றுவலியுறுத்தப்பட்டது
அதற்கிணங்க சகல மத்தியஸ்
தர்களும் 1981ம் ஆண்டுஒன்று
கூடிய யாழ் உதைபந்தாட்ட
மத்தியஸ்தர் சங்கத்தை புனர்
அமைப்பு செய்து யாழ் உதை
பந்தாட்டம் லீக் சங்கத்துடன்
இணைத்துக் கொண்டனர்
அன்றுதொடக்கம் நமதுசங்கம்
சகல உரிமைகளுடனும்
செயற்பட்டுவருவது மகிழ்ச்
சிக்குரிய தொன்றாகும்.

நமது சங்கம் பலதரபட்ட
மத்திஸ்தருக்காக பலவிரிவுரை
வகுப்புக்களை நடத்தியுள்ளது
விதன்பயனாக சிறிலங்கா

**திரு, E. K. குமரையா**

அலுள்ள மற்றையமாவட்டங்
களில் உள்ள மத்தியஸ்தர்
சங்கங்களைக் காட்டிலும்
பரீட்சையில் சித்தியடைந்
தோர் எண்ணிக்கை முன்
னணியில் நிற்கிறது

இச்சந்தர்பத்தில் இவ்வகுப்
புகளை நடத்த உதவியவர்களை
நினைவு கூர வேண்டிய நன்றி
கூற வேண்டிய கடமைப்பாடு
எமக்கு உண்டு விரிவுரை
நிகழ்த்தியோர் திருவாளர்கள்
இ. சபாலிங்கம், எஸ், சிறிநி
வாசன் இ.கனகலிங்கம்இ.கே.
குமரையா கே.யதுகுலசிங்கம்
எம். பத்மநாதன் அ. தேவ
ராசா எம். டி, தம்பிராசா,
எஸ். அந்தோனிப்பிள்ளை
கப்டன் டி ,ஏ.எம்.குணசிங்கம்
கே. என். வை. மொறிஸ்
எஸ் அண்ணாத்ரை ஆகியோர்
ஆவர்கள்.

நன்றி

### யாழ். உதைபந்
## சங்கச் செயல

இன்றைய உலக
ளின் வாழ்வோடு பின்
பிணைந்த ஓர் அங்கமாக
யாட்டுத்துறை விரிவ
துள்ளது.

யாழ்ப்பாணத்
பொறுத்த மட்டில் உ
பந்தாட்டம் மட்டுமே
மான இளைஞர்களின்
யாட்டாகவும, மக்களிடை
அதிக ஆதரவையும் செல்
கையும் பெற்ற ஆட்டமாக
உள்ளது.

யாழ். நகர உதைப்
தாட்ட மத்தியஸ்தர்கள்
கென ஓர் அமைப்பினை
வாக்கி கடந்த நாற்
ஆண்டுகள் தொடர்ச்சி
செற்பட்டு வருவது வரலா
முக்கியத்துவம் வாய்
செயற்பாடு என்பதனை
ரும் மறுக்கவியலாது

**1988-89**



அமர்ந்திருப்பவர்கள்
பிள்ளை (உ. தலைவர்), S
(தலைவர்), P. R தம்பி
(உ தலைவர்), A தே
நிற்பவர்கள் (இடமிரு
லாளர்) J. Y. சந்தியே
ஞானசம்பந்தர்.

வேளை ஓர் கட்டுப்பாட்டி
கீழ் செயற்படும் வீரர்க
பலரை நற்பிரசைகளாக ந
மாட காரணமாகவும் மத்
யட்சகர்கள் விளங்கியுள்
னர் விளங்கியும் வருகின்
னர்.

இலங்கையின் உதைப்ப
தாட்டச் சம்மேளனத்தி
மத்தியஸ்தர் சங்கம் பொ
விழாவினைக் கொண்டா
அதே ஆண்டு எமது சங்க
தனது நாற்பதாவது ஆண்
நிறைவு விழாவினைக் கொ
டாடுவயைிட்டு மகிழ்ச்சியடை


**குருநகர் கடற்தொழில் சங்கம்**
குருநகர் யாழ்ப்பாணம்

# ட்ட மத்தியஸ்தர் சங்கமம்

# ண்டு சிறப்பு மலர்

## ந்தாட்ட மத்தியஸ்தர் லாளரின் ஆசிச்செய்தி

மகிக
ன் னிப்
க விளை
டை ந்

தைப்
உதைப்
அதிக
விளை
டையே
சல்வாக்
ாகவும்

ப்ப ந்
ள் தமக்
உரு
ற்பது
சியாகச்
லாற்று
ாய்ந்த
எவ
அதே

கிறேன். இந்நாற்பது ஆண்டுப்பணியில் நமது விளையாட்டுக் காப்பாளர்கள் ஆற்றிய பணிக்கு அடையாளமாக அமைவது எமது தரம் சர்வ தேசமட்டத்திற்கு அந்தஸ்துக்கு உயர்வு பெற்று விளங்குவதேயாகும். இதையிட்டு நாம் அனைவரும் பெருமை

## இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தலைவரின் செய்தி

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க 40வது ஆண்டு நிறைவுவிழாவுக்கு செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யா உ.ம.சங்கம் யாழ்உதைபந்தாட்டச் சங்கத்திற்கும் இ.உ.ம.சங்கத்திற்கும் கடந்த 40 வருடங்களாகச் சேவை யாற்றிவருகிறது. இ.உ.ம சங்கத்தின் 26 மாவட்ட மத்தியஸ்தர் சங்கங்களிலும் யா உ.ம சங்கம், நிர்வாகம், ஒழுக்கம் உதைபந்தாட்ட விதிகளின் அறிவு திறமை மற்றும் நிதி நிர்வாகம் என்பவற்றில் முன்னணியில் திகழ்வதையிட்டுப் பெருமையடைகின்றேன்.


திரு.எஸ். சிறினிவாச ஐயர் மறைந்த திரு இ சபாலிங்கம் திரு இ கனகலிங்கம் திரு இ க குமரையா திரு எஸ் கிருஸ்ணன் ஆகிய முன்னாள் எவ் ஐ எவ் எ மத்தியஸ்தர்கள் யாழ் உ ம சங்கத்திற்கும் இ உ ம சங்கத்திற்கும் பெரும் சேவை யாற்றி இருக்கிறார்கள்.

நான் கடந்த 19 வருடங்களாக எவ் ஐ எவ் ஏ மத்தியஸ்தராகவும் இ உ ப ச தலைவராகவும் 1989 தொடக்கம் ஆசிய மத்தியஸ்தர்களின் பயிற்றுநராகவும் இருந்து வருவதற்கு யா உ ம சங்கம் எனக்களித்த ஊக்கத்திற்கும் ஆரம்ப காலங்களில் நான் ஒரு விளையாட்டு வீரனாக இருந்தபோது எனக்களித்த உற்சாகத்திற்கும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

யா உ ம சங்கத்தின் தற்போதைய கடந்தகால நிர்வாகிகளுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு யா உ ம சங்கததிற்கு எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**ரி பேரின்பநாதன்**
தலைவர் இ உ ம ச
Refere Instructor A F C
தேசிய விளையாட்டுச்சபை உறுப்பினர்

## 89 ஆண்டுக்கான நிர்வாக சபை



கள் (இ. வலம்) K. ஜதுகுலசிங்கம் (உ. தலைவர்), A. செபஸ்ரியாம் ), S. அன்ரனிப்பிள்ளை கிளிபேட் (செயலாளர்), E K குமரையா தம்பிநாயகம் (பொருளாளர்), கப்ரின். D A. M. குணசிங்கம் தேவராஜா(உ. தலைவர்)
மிருந்து வலம்):- M. K. விமலதாஸ். M. பிரான்சிஸ், (உ. செய தியோ, G. M. செபஸ்ரியாம்பிள்ளை, S. அண்ணாத்துரை, V. திரு

ட்டின்
ர் கள்
க நட
மத்தி
யுள்ள
கின்ற

தப்பந்
த்தின்
பொன்
டாடும்
சங்கம்
ஆண்டு
கொண்
சியடை

அடைய வேண்டும்.

எதிர்காலத்தில் மேலும் எமது சங்கத்தை உயர்வடையச் செய்வதும் எமது கடமையாகும். இவ் விளையாட்டில ஈடுபாடு உள்ள இளைஞர்கள் மத்தியட்சர்களாக கடமை யாற்ற முன்வர வேண்டும்,

**எஸ் அந்தோனிபபிள்ளை கிளிப்பேட்**

மலர் அமைப்பு
கப்ரின், D A M.
குணசிங்கம்

## வாழ்த்து செய்தி

யாழ் மாவட்டத்தில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட நிகழ்ச்சிகளுக்கு உறுதுணையாக நின்று உற்சாகமளித்து வரும் "யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்" தனது 40வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

உதைபந்தாட்டத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடனும் போட்டிகள் யாவும் ஒழுங்காக விரிவான முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த மத்தியஸ்தர் சங்கம் தான் எடுத்துக் கொண்ட நோக்கத்தினை இந்த 40வது ஆண்டு காலத்தில் நிறைவேற்றியுள்ளதோடு யாழ் உதைப்பந்தாட்ட லீக் நடாத்தி வரும் போட்டிகளுக்கும் அதனுடைய செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்க பாரரட்டுக்குரியவிடயமாகும்.

மத்தியஸ்தர் சங்கமும் உதைபந்தாட்ட லீக்கும் தொடர்ந்தும் ஒற்றுமையா இருந்து திறன்படசெயலாற்ற வேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**டாக்டர் ஜெ. பி. சி. பிலிப்**
(தலைவர் ஜெ எப். எல்)


(யாழ்) இலங்கை வங்கி
யாழ்ப்பாணம்

# வாழ்த்துவோர்

**மியாமி காமன்ஸ்**
ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்

**கலாநிதி யே: பி. சி. பிலிப்ஸ் [J.P.]**
தனியார் மருத்துவமனை
யாழ்ப்பாணம்

**ஒல்ட் பாக் சைனீஸ் ரெஷ்ரூறன்ற்**
207 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

**பற்றீசியன்**
சென் பற்றிக்ஸ் வீதி யாழ்ப்பா ணம்

**"பெஸ்ற் பல்ப்"**
ஏகவிநியோகஸ்தர்கள்
அருள்எலெக்ரிக்கல் ஸ்ரோஸ்
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

**யாழ் என்ரப்பிறைஸ்**
யாழ்ஆஸ்பத்திரிக்கு முன்பாக
யாழ்ப்பாணம்

**சிங்கப்பூர் போசனசாலை**
42 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**போட்டோ கலர் பிறின்ரஸ்**
செரீஸ் மாக்கற்றிங் நிர்வாகிகள்
380 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

**வி. பீற்றர்**
24/1 சென்பற்றிக்ஸ் வீதி
யாழ்ப்பாணம்

**நியூ விஜயா ஸ்ரோர்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

**எஸ். வீ. சிவகுருநாதன்**
85 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

# 'தம்பி இருக்குமிடம் தமிழீழம்'

**-நெடுமாறன்**

**ஈழத்தில் இருபத்தைந்து நாட்கள் பயணம் செய்த நெடுமாறன். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார்: அந்த அனுபவங்களைக் கூறுகிறார்.**

கொழும்பிலிருந்து யாழ். தேவி ரயில் மூலம் நான்புறப்பட்டு கிளிநொச்சி ரயில் நிலையத்தில் வந்து இறங்கிய போது எங்கு பார்த்தாலும் புலிக்கொடிகள் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தன. வன்னித் தளபதி ஜெயம், கிளிநொச்சித் தளபதி ரத்தன் ஆகியோர் என்னை வரவேற்று அழைத்துச் சென்றனர். ரயில் நிலையத்துக்கு வெளியே இருந்த டீக்கடையில் "இது வேங்கைகள் விளையும் நாடு" என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

கிளிநொச்சியில் எனது பழைய நண்பர் நாதன் வீட்டுக்குச் சென்றேன். அங்கு உணவருந்திவிட்டு பிறகு பயணமானேன். மூன்று இடங்களில் கார்களும், காவலர்களும் மாற்றப் பட்டனர். அந்தி மயங்கும் வேளையில் ஒரு கானகத்தின் வெளிப்புறத்தை அடைந்தோம். அங்கிருந்து சிலமைகள் நடந்து சென்று புலிகளின் முகாம் ஒன்றினை அடைந்தோம். அங்கு இரவு தங்கிவிட்டு காலையில் புறப்பட்டு 'தம்பி' பிரபாகரன் இருக்கும் முகாமுக்குப் போகலாம் என அன்பு என்ற விடுதலைப் புலி கூறினார். இரவில் அந்த முகாமிலிருந்த புலிகளுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

கானகத்தில் தங்கியிருந்த இரண்டாண்டு காலம்பிரபாகரனின் தலைமையில் இந்தியப் படையை எதிர்த்து விடுதலைப் புலிகள் போரிட்டது திகைப்பூட்டும் வீரவரலாறுகும். எவ்வித வசதியுமில்லாத காட்டில் உணவோ, தண்ணீரோ கூடக் கிடைக்காமல் பல நாட்கள் பட்டினி கிடந்த நிலைமை புலிகளுக்கு உண்டு. ஆனாலும் கூட அவர்கள் கொஞ்சமும் மனம் தளரவில்லை. அச்சம் கொள்ளாமல் துணிந்து போராடினார்கள் என்றால் அதற்குப் பிரபாகரனின் தலைமையே காரணமாகும். இந்திய ராணுவத்தின் பெரும் பலத்தை எதிர்நோக்கும், போர்ப் பயிற்சியைமட்டுமல்ல துயரங்களையும் துன்பங்களையும் தாங்கும் மன வலிமையையும் பிரபாகரன் தனது தோழர்களுக்கு ஊட்டினார்.

ஒரு முறை கிடைத்த மாவைக் கொண்டு தோழர்கள் கஞ்சி காய்ச்சினார்கள். மரக்குச்சியைக் கொண்டு மாவைக் கிண்டும் போது சட்டி உடைந்து அவ்வளவு கஞ்சியும் அடுப்பில் வழிந்து சாம்பலோடு கலந்து மண்ணில் பரவியது பல நாட்கள் பட்டினியுடன் காத்துக்கிடந்த தோழர்களின் பசித்த விழிகள் இந்தக் காட்சியைக் கண்டதும் கலங்கின. ஆனால் பிரபாகரன் கொஞ்சமும் கலங்காமல் முன் வந்து அடுப்பின் முன்னால் மண்டியிட்டு சாம்பலும் மண்ணும் கலந்த கஞ்சியை கையால் வழித்துஉண்டு காட்டினார். மற்றவர்கள் அவரைப் பின்பற்றினார்கள்.

காட்டில் மழைக் காலத்தில் பெரும் கஷ்டம். மழைக்கான ஆடைகள் இன்றி ஒதுங்குவதற்கு இடமின்றி ஈரமண்ணிலேயே படுத்து உறங்க வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு அவர்கள் ஆளானதும் உண்டு. காட்டுக்குள் இருக்கும் புலிகள் மீது விமானங்கள் மூலம் குண்டுமழையினை இந்தியப் படை பொழிந்தது. பீரங்கிகள் மூலமும் இடைவிடாமல் குண்டுகளைப் பீச்சியது பிரபாகரன் இருந்த காட்டில் மட்டும் சுமார் ஐயாயிரம் குண்டுகள் விழுந்திருக்கும். 250 கிலோ கொண்ட இந்தக் குண்டுகள் பெரும் நாசத்தைக் காட்டில் ஏற்படுத்தி இருந்தன. மரங்கள் முறிந்து தரையில் பெரும் பள்ளங்களையும் இந்தக் குண்டுகள் ஏற்படுத்தியிருந்தன. அத்தகைய இடங்கள் சிலவற்றை நான் பார்த்தேன்.

'ராமன் இருக்கும் இடம் அயோத்தி' என்பார்கள். அதைப்போல 'தம்பி இருக்கும் இடம் தமிழீழம்' என்பதை அந்தக்காட்டில் நான் கண்டேன். சூரிய ஒளி புகுவதற்குத் தயங்கும் அந்த அடர்ந்த காட்டிலே மற்ற தோழர்களுடன் பிரபாகரனைச் சந்திக்க நான் நடந்து சென்ற போது வழிநெடுக விடுதலைப்புலிகள் ஆங்காங்கே பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்தேன். மரம் வெட்டுதல், பொருட்களைச் சுமந்து செல்லுதல் போன்ற பணிகளையெல்லாம் ஆண்களை விட பெண்புலிகள் மேற்கொண்டிருப்பதைப் பார்த்து திகைப்படைந்தேன்.

பல மைல் தூரம் நடந்து சென்று காலை சுமார் பதினொரு மணியளவில் தம்பி இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தோம். கூடாரத்துக்குள் இருந்த தம்பி வெளியில் வந்து என்னைக் கட்டித் தழுவிய போது உணர்ச்சிப் பெருக்கால் எனது கண்கள் பனித்தன.

1987-ம் ஆண்டு திலீபனின் உண்ணாவிரதத்தின் போது தம்பியை யாழ்ப்பாணத்தில் சந்தித்த நான் அதற்குப் பின்னர் அவரைச் சந்திக்கவில்லை. இரண்டரை ஆண்டு காலத்தின் பின்னர் அவரைச் சந்திக்கிறேன். இந்த இடைக்காலத்தில்தான் அவரைப்பற்றி எவ்வளவு அவதூறுகள் திட்டமிட்டுப் பரப்பபட்டன! அவர் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி எவ்வளவு வேகமாகப் பரப்பப்பட்டது! இன்னும் அதைப்பரப்பிக் கொண்டிருப்பவர்கள் இருக்கின்றார்கள்!

தம்பிக்காக நான் கொண்டு சென்றிருந்த விதையில்லாத திராட்சைப் பழங்கள் அடங்கிய பெட்டியை அவரிடம் கொடுத்தபோது மகிழ்ச்சியுடன் அவற்றைப் பெற்றுக் கொண்டு ஒன்றிரண்டு பழங்களை எடுத்து வாயிற் போட்டார். மறுகணம் பக்கத்திலிருந்த இளம்புலி ஒருவரை அழைத்து அவர் கையில் கொடுத்து எல்லோருக்கும் கொடுக்கும்படி கூறிவிட்டார்.

போர்க்காலச் சூழலில் எப்போதும் இருந்துவரும் பிரபாகரனின் இதயம் கடினமாகிவிடவில்லை. மாறாக அந்த இதயத்தில் நகைச்சுவை உணர்வு ததும்புகிறது தன்னுடைய சக தளபதிகளைக் கிண்டல் செய்கிறார். சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறார். அவரும் சிரித்து மகிழ்கிறார்.

அவருடைய அலுவலகக் கூடாரத்தில் உட்கார்ந்து நான் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். அவர் வேறொரு வேலையாக வெளியிற் சென்று திரும்பியவர் உரத்த குரலில் "மாதரசி மதிவதனி......... சாப்பாடு தயாரா? என்று கேட்ட போது என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அடுத்த கூடாரத்திலிருந்த அவரது துணைவியார் மதிவதனி அவரைப் பின்தொடர்ந்து நான் இருந்த கூடாரத்துக்கு வந்தார். "எப்போதும் மாதரசி என்று சொல்லி என்னைக் கேலி செய்கிறார்" என்று என்னிடம் புகார் செய்தார்.

பிரபாகரன் சிரித்துக் கொண்டே, "அண்ணா நான் கேலி செய்யவில்லை. நீங்கள் எழுதியிருப்பதைத்தான் நான் சொல்கிறேன்" என்றார். பிரபாகரன் பற்றி நான் எழுதிய நூலில் 'மாதரசி மதிவதனி' என்ற தலைப்பில் அவருடைய துணைவியார் பற்றி எழுதியிருந்தேன். அதையே அவர் தன்னுடைய மனைவியைக் கிண்டல் செய்யப் பயன்படுத்தியபோது என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

ஒரு நாள் அவரைச் சந்திக்க மாத்தையா வந்தார். அப்போது பிரபாகரனுடன் நானும் இருந்தேன். திடீரென்று பிரபாகரன் எழுந்து நின்று "மக்கள் முன்னணித் தலைவரே வருக வருக" என்று வரவேற்றார். மாத்தையாவும் இதற்குச் சளைத்தவரல்ல.


"நல்லவேளை" மேள தாளங்கள் வைத்து வரவேற்கவில்லை" என்றார். அனைவரும் சிரித்தோம்.

அதுபோல கவிஞர் காசி ஆனந்தன் எனது அருகில் உட்கார்ந்திருந்தார். அவரின் வயதும் என் வயதும் கிட்டத் தட்டச் சமமாக இருக்கும். அவருக்குத் தலைமுடியோ மீசையோ கொஞ்சமும் நரைக்காது இருப்பது கண்டு நான் வியந்தேன். அவரிடம் "குன்றாத இளமையின் மாறாத ரகசியம் என்ன?" என்று கேட்டேன். அவர் பதில் சொல்லாமற் சிரித்து மழுப்பினார்.

அருகிலிருந்த பிரபாகரன் "அண்ணா, நான் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் காசி அண்ணாவின் குன்றாத இளமையின் மாறாத ரகசியம் 'டை' போடுதல்" என்று சொன்னபோது சிரிப்பலைகளால் அந்தக் கூடாரமே அதிர்ந்தது.

புலிகள் இயக்கத்திலுள்ள தோழர்களிடையே எத்தகைய சச்சரவுக்கும் இடமில்லை. ஆனாலும்கூட சிலநேரங்களில் யாரேனும் இரண்டுபேருக்கு இடையே சச்சரவுகள் வந்துவிடுமேயானால் அவர்களுக்குப்பிரபாகரன் விதிக்கும் தண்டனை மிகவேடிக்கையானது. ஒருவரின் வலது கரத்தையும் இன்னொருவரின் இடது கரத்தையும் இணைத்து விலங்கு பூட்டி ஒருவாரம் அப்படியே இருக்க வேண்டுமென்று அவர் உத்தரவு பிறப்பிக்கிறார். தண்டனைக்கு ஆளான அந்த இருவரும் உறங்குவதிலிருந்து உண்பதுவரை என்ன செய்தாலும் ஒன்றுசேர்ந்தே செய்ய வேண்டும். ஒருவர் உதவியில்லாமல் மற்றொருவர் எதுவும் செய்ய இயலாது அப்படி 'தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு இளைஞர்கள் தற்செயலாக நாங்கள் அமர்ந்திருந்த மரத்தடிப்பக்கம் வந்தனர் அவர்களைப் பிரபாகரன் அருகே அழைத்தார். 'இந்த இணைபிரியாத நண்பர்களைப் பார்த்தீர்களா? எவ்வளவு ஒற்றுமை சாப்பிட்டாலும் ஒன்றாகச் சாப்பிடுவார்கள். குளித்தாலும் ஒன்றாகக் குளிப்பார்கள் எங்கு போனாலும் ஒன்றாகவே போவார்கள். இப்படி ஒற்றுமையானவர்கள் உங்கள் நாட்டில் உண்டா?" என்று கேட்டுக் கலகலவென்று சிரித்த போது அந்த இருவரும் அவருடன் சேர்ந்து சிரித்துக் கொண்டார்கள் அவர்கள் சென்றபிறகு பிரபாகரன் குறும்பாகக் குரலைத் தாழ்த்தி என்னிடம் "இனி ஒருகாலத்துக்கும் இவர்கள் யாருடனும் சண்டை போட்டுக்கொள்ளமாட்டார்கள்" என்றார்.

புலிகளின் உணவு, உடை குளிப்பு, பல்விளக்குதல் முடிவெட்டுதல், பொழுதுபோக்குதல் போன்ற சகல விஷயங்களையும் பிரபாகரனே மேற்பார்வையிடுகின்றார். காட்டு



வாழ்க்கையில் சுத்தமும், சுகாதாரமுமே முக்கியமானது என்று அவர் போதிக்கிறார். எந்த இடத்தையும் யாரும் அசுத்தம் செய்வதில்லை. குப்பைக் காகிதத்தைக் கூட வீசி எறிவதில்லை. எச்சில்கூடத் துப்புவதில்லை.

இயக்கத்திற்கு அப்பாற்பட்ட பொதுமக்களும், இயக்கத்தில் உள்ளவர்களும் தங்களுக்குள்ள குறைகளையோ நாட்டில் நிலவும் குறைகளையோ பிரபாகரனுக்குத் தெரிவிக்க விரும்பினால் அதற்கும் வழி செய்திருக்கிறார் பிரபாகரன். 'விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கிளைகள்' வடக்கு - கிழக்கு மாநிலத்தில் எல்லா இடங்களிலும் உள்ளன. அந்த அலுவலகங்களில் 'தலைவருக்கு ...' என்று எழுதப்பட்டுள்ள அஞ்சல்பெட்டிகள் தனியாக வைக்கப்பட்டுள்ளன. தங்கள் குறைகளைப் பிரபாகரனுக்குத் தெரிவிக்க விரும்புபவர்கள் கடிதம் எழுதி இந்த அஞ்சல் பெட்டியில் போடலாம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தந்த மாவட்டத் தளபதிகளிடம் இந்த அஞ்சல்பெட்டிகளின் சாவிகள் இருக்கும். வாரத்துக்கு ஒருமுறை இப்பெட்டிகள் திறக்கப்பட்டு அதிலுள்ள கடிதங்கள் எடுக்கப்பட்டு பிரபாகரனுக்கு அனுப்பப்படுகின்றன. பிரபாகரனின் அலுவலகத்தில் இந்தக் கடிதங்கள் முறையாகப் பிரிக்கப்பட்டு அவர் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. கூடுமானவரை எல்லாக் கடிதங்களையும் அவரே பார்க்கிறார். சுட்டிக்காட்டப்படும் குறைகள் விடுதலைப்புலிகளைப் பற்றியதாக இருந்தாலும் அவற்றின் மீது தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கிறார்.

போர்க்களத்திலும் சில நெறிமுறைகளைக் கையாளும்படி புலிகளுக்குப் பிரபாகரன் கண்டிப்பான கட்டளையிட்டிருக்கிறார். களத்தில் சுட்டு வீழ்த்தப்படும் எதிரிகளின் ஆயுதத்தங்கள், பாட்ஜுகள் ஆகியவற்றை மட்டுமே கைப்பற்ற வேண்டுமே தவிர அவர்களின் கைக்கடிகாரம், மணிபர்ஸ் மற்றும் சொந்த உடமைகளை யாரும் தொடக்கூடாது. இதை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது.

ஒருநாள்ஏராளமானபுலிகள் ரி.வி. பார்த்துக்கொண்டிருந்தார்கள். கொழும்பிலிருந்து ஒளிபரப்பட்ட பல நிகழ்ச்சிகள் காட்டப்பட்டன. நானும் அவர்களுடன் உட்கார்ந்து அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆங்கிலத் திரைப்படம் ஒன்று காட்டப்படப்போவதாக ரி.வி. - யில் அறிவிக்கப்பட்டது. உடனடியாக அங்கிருந்த புலிகள் அனைவரும் எழுந்து வெளியேறிச் செல்லத் தொடங்கினார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் நீங்கள் படம் பார்க்கவில்லையா? என்று கேட்டேன் புலிகளில் ஒருவர் "இது போன்ற படங்களை நாங்கள் பார்க்கக்கூடாது" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அவர்கள் பார்க்கக்கூடாத படத்தை நான் பார்ப்பது சரியல்ல என்ற மனவுறுத்தல் எனக்கு எழுந்தது. தொலைக்காட்சியை உடனே அணைத்தேன்.

காட்டில் புலிகள் குடிபுகுந்த போது பல தொலைகளைச் சமாளிக்க வேண்டி நேர்ந்தது. அவற்றில் முக்கியமானது ஈக்களின் தொல்லை. பிரபாகரனுக்கு ஈ என்றாலே அருவெருப்பு ஆனால் காட்டில் ஆயிரக்கணக்கான ஈக்கள் மொய்த்துக் கொண்டே இருந்தன. ஒரு நாள் பிரபாகரன் தனது தோழர்களை அழைத்து ஈக்களையெல்லாம் ஒழிக்க வேண்மென்று கூறினார். அருகிலிருந்த ஒருவர் "அது எப்படி முடியும்?" என்று கேட்டார் "பத்தே நாட்களில் ஈக்களை ஒழித்துக் காட்டுகிறேன்" என்று பிரபாகரன் கூறிவிட்டு தன்னுடன் இருந்த விடுதலைப் புலிகளுக்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். "ஒவ்வொரு விடுதலைப்புலியும் ஒரு நாளைக்கு இருநூறு ஈக்கள் பிடிக்க வேண்டும்"

பத்தே நாட்களில் ஈக்கள் ஒழிக்கப் பட்டன.

புலிகள் எவ்வளவோ விஷயங்களில் கட்டுப்பாடு நிறைந்தவர்கள். சிகரெட் புகைப்பதில்லை, பொடி போடுவதில்லை வெற்றிலைப் பாக்கு கிடையாது மது அருந்துவதில்லை.

லண்டனிலிருந்து பிரபாகரனுக்கென்று மிக நவீனமான கைக்கடிகாரம் ஒன்றினையும், சிறிய வாக்மேன் (ஸ்டீரியோ) ஒன்றினையும் கிட்டு அனுப்பி வைத்திருந்தார். அவற்றை என்னிடம் பிரபாகரன் காட்டினார்.

"கிட்டு அன்போடு அனுப்பி வைத்ததை கையில் கட்டிக் கொள்ளாமல் வைத்திருக்கிறீர்களே?" என்று நான் கேட்டபோது, பிரபாகரன் சிரித்துக்கொண்டே கூறினார் "என்ன செய்வது? என் மனைவி எனக்கு ஏற்கனவே ஒரு கைக் கடிகாரத்தைப் பரிசளித்திருக்

—7 ஆம் பக்கம் பார்க்க



வெளிநாட்டுத் தபால் உடைப்பு மோசடி அம்பலம்

# ஊரார் வீட்டுப் பணத்தில் ஆட்டோ வாங்க முயற்சி!

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் விமானத் தபால்களை உடைத்து அவற்றிலுள்ள வெளிநாட்டுப் பண நோட்டு, காசோலை, வங்கி ஓடர் பத்திரம் போன்றவற்றைத் திருடியதாகக் கூறப்படும் இரு நபர்கள் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மோசடி நடவடிக்கை சில காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதாகவும் அறிய வருகிறது.

களவாடப்பட்ட 35,000 ரூபா பணத்தைக் கொண்டு ஆட்டோ ஒன்றை வாங்க ஒருவரிடம் முற்பணமாகக்கொடுக்கப் பட்டதாகவும் பொலிஸ் புலன் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பு டாம் வீதியில் இத்திருட்டுக் கோஷ்டி இயங்கி வந்ததாகவும் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டபோது 800 வெளிநாட்டுத் தபால்கள் வரை ஒவ்வொன்றாக உடைக்கப் பட்டுக் கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டதாகவும் கைதான ஒரு சந்தேக நபர் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்தில் பணியாற்றுபவரென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உடைக்கப்படாத 560 கடிதங்களையும் பொலிஸார் தபாலதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

வடமராட்சி

## கல்விக் கோட்டத் தமிழ்த்தின விழாப் போட்டி முடிவுகள்

வடமராட்சி கல்விக் கோட்டத் தமிழ்த்தின விழா போட்டிகள் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இவ் விழாவுக்கு கல்வி அதிகாரி திரு. ச. செல்லத்துரை தலைமை தாங்கினார். வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலர் உதவிக் கல்விப் பணிப்பாளர், திரு. பொ. வீரபத்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதலிடம் பெற்ற போட்டி முடிவுகள் பின்வருமாறு;

பிரிவு-1 ஆண்டு 4, 5, எழுத்து வே வாசுகி துப்பளை சிவப்பிரகாச மாகவித்தியாலயம் வாசிப்பு -கு. துஷ்யந்தி வதிரி வடக்கு மெதடிஸ்ற் மிஷன் பாடசாலை பாஓதல் (தனி) அ. கல்யாணி வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆக்கம் ஞா. கௌரி வல்வை மகளிர் மகா வித்தியாலயம் பாஓதல் (குழு) தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

பிரிவு-2 ஆண்டு 6, 7, 8 வாசிப்பு செ. மரீனா, குடத்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆக்கம் மு. வித்தியானந்தி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பேச்சு த. கௌசலா வல்வை மகளிர் மகா வித்தியாலயம் நடனம் (அலாரிப்பு) பிருந்தா, வட இந்து மகளிர் கல்லூரி நடனம் (கிராமியம்) பிரதீபா, யா/ குடத்தனை அ. த. க. பாடசாலை நடனம் (குழு) யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் பாஓதல் (குழு) யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி பாஓதல் (தனி) க. லோகநாதன், அம்பன் அமிதக பாடசாலை இசை (தனி) ச காந்திமதி நாகர்கோவில் மகா வித்தியாலயம் இசை (குழு) யா/ வல்வை மகளிர் வித்தியாலயம்.

பிரிவு 3 ஆண்டு 9, 10, 11 பேச்சு இ. வாசுகி, வட இந்து மகளிர் கல்லூரி. கட்டுரை ச. சிவமாலதி, அம்பன் அமி. த. க. பாடசாலை ஆக்கம் (சிறுகதை) சிறீ வனிதா, நாகர் கோயில் மகா வித்தியாலயம். ஆக்கம் (கவிதை) க. யோக நாயகி, செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை. நடனம் (குழு) கிராமியம் யா மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை. நடனம் (ஜதீஸ்வரம்) க கர்ணன், விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி. இசை (தனி) அ. ஜமுனா, வல்வை மகளிர் மகா வித்தியாலயம். இசை (குழு) யா மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை. பாஓதல் (குழு) யா செம்பியன் பற்று அ. த. க. பாடசாலை

பிரிவு 4 ஆண்டு 12 13 பேச்சு த சுபசீதன் ஹாட்லிக் கல்லூரி கட்டுரை த நிலாமதி உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி ஆக்கம் (கவிதை) ஜீ தெய்வலோஜினி மெதடிஸற் பெண்கள் கல்லூரி பருத்துத்துறை இசை (தனி) கர்நாடகம் இ மஞ்சுளா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பாஓதல் (தனி) ச வசந்தலோஜினி உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி திறந்த நிகழ்ச்சி வில்லுப்பாட்டு யா வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை நாடகம் (காத்தவராயன்) யா வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை 15

## சுவையான செய்திகள்

### சிரித்துக் கொண்டே சாகலாம்

உலகிலே நியுகினிதீவு பகுதியில் மட்டும்ஒரு விநோதமான வியாதி காணப்படுகின்றது. அந் நோய்க்கு சிரிப்பு நோய் என்றுபெயர் இந்தநோய் கண்டவர்கள், விடாமல் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். இதற்கு சிகிச்சையேகிடையாது. இந்நோய் வந்து விடடால், சிரித்து-சிரித்து-சிரிதத்தே சாவதைத் தவிர வேறு வழியே இல்லை. சிரித்துக் கொண்டே சாகவிரும்பினால் நியூகினி தீவுச்குபோகலாம்.

### ஸ்டிரை என்றால் என்ன?

ஜப்பானில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதே ஒரு தனி ஸ்டைல்தான் ஸ்டிரைக் என்றால் வேலைக்குப் போகாமல் தொழிற்சாலைக்கு வெளியே நின்று கோஷம் எல்லாம் போட மாட்டார்கள்! பிறகு? வேலைக்குப் போவார்கள். உருப்படியாய் வேலையும் செய்வார்கள். ஆனால் புஜத்தைச் சுற்றி தங்கள் துக்கத்தையும், மன வேதனையையும் காட்டுவதற்காக கறுப்புப் பட்டைகளை அணிந்திருப்பார்களாம்.

### பரீட்சை ஒத்திவைப்பு

இன்று 21-ம் திகதி இராமநாதன்கல்லூரியில் நடைபெறவிருந்த முறைசாராக்கல்விப் பிரிவு ஹேராட்டல் முகாமைத்துவ மாணவருக்கான செய்முறைப் பரீட்சை மே 5ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### கைக் கடிகாரம் உங்களுடையதா?

பெண்களுக்குரிய 'TUTA' ரக கைக் கடிகாரமொன்று அத்தியடியில் கண்டெடுக்கப்பட்டு ஐ வைத்திலிங்கம் என்பவரால் முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில், ஆசிரிய பீடத்தில் அடையாளம்காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

(......6-ம் பக்கத் தொடர்ச்சி)

### தம்பி இருக்குமிடம் தமிழீழம்

இருள். 'எந்த நேரமும் இது உங்கள் கையில் இருக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறாள் அதை மீற என்னால் இயலாதே! "என்று சொல்லி விட்டு சிரித்தார். அருகேயிருந்த வன்னிப்பகுதி" தளபதி பால்ராஜை அழைத்து அவருக்கு அந்தக்கடிகாரத்தைப் பரிசளித்தார். திருகோணமலைத் தளபதி பதுமனை அழைத்து அவருக்கு வாக்மேனைப் பரிசாக கொடுத்தார்.

பிரபாகரனின் துணைவி மதிவதனியை மட்டுமன்றி மகன் சார்லஸ், மகள் துவாரகா ஆகியோரைக் காட்டுக்குள் இருக்கும் முகாமுக்குள் சந்தித்தேன். குழந்தைகள் இருவரும் துடிதுடிப்புடன் இருக்கிறார்கள். சில மாதங்களிற்கு முன்பு வரை சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்த அவர்கள் இப்போது மகிழ்சியுடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு மற்ற பிள்ளைகளைப் போல பள்ளிக்கூடம் செல்லவோ, எல்லோரிடனும் சேர்ந்து விளையாடவோ வாய்ப்பு இல்லை. விடுதலைப்புலிகள்தான் அவர்களின் விளையாட்டுத் தோழர்கள். பிரபாகரனைக் காண வரும் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் இந்தக் குழந்தைகளுடன் கொஞ்ச நேரம் வேடிக்கையாகப் பொழுது போக்குகிறார்கள்.

ஒரு நாள் மரத்தடியில் அமர்ந்து நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது குழந்தைகள் இரண்டும் புள்ளி மான்களாகத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது பிரபாகரன் பின்வருமாறு கூறினார்: "அண்ணா! சிரித்து விளையாடும் இந்தப் பிள்ளைகள் நாளை குண்டு வீச்சில் பிணமாக மாறலாம். கனவு போல அவர்களைப் பற்றிய நினைவு கலையலாம். எனவே தான் அவர்கள் மீது அதிக பாசம் வைப்பதில்லை. என்ன நேர்ந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் மனப் பக்குவத்தை நாங்கள் பெற்று விட்டோம்" என்று கூறிய போது என் நெஞ்சம் நெகிழ்ந்தது.

(நன்றி ஆனந்தவிகடன்)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### வீதி விபத்துக்களைத் தடுக்க பத்திரிகைகள் உதவுமா?

ஆசிரியர்
முரசொலி

இன்று அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கண்டு கவலையுறாதவர்கள் இல்லை. வீதி விபத்துக்கள் பற்றி அது சம்பந்தப்பட்ட அனைவரும் பல்வேறு வழிமுறைகளில் ஆராய்ந்து அவற்றைத் தவிர்க்ககூடிய ஆலோசனைகளை பொதுமக்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள். வெகுசன சாதனங்கள் மூலமும் பிரசாரம் செய்யப்படுகிறது. வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென வெறுமனே கோரிக்கை விடுப்பதனால் விபத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடமுடியாது. வீதி ஒழுங்கு விதிமுறைகள் பற்றிய அறிவை மக்களுக்கு நன்கு புரிய வைத்தல் வேண்டும்.

வெகுசன சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் மூலம் இப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டாலும், அவ்வசதி சகலருக்கும் கிட்டாத ஒன்றாகும், வசதி கிட்டுமிடத்து, செவிமடுப்பதோடும், அந்நேரத்தில் கண்டு பெறும் மட்டுப்படுத்தப்பட்ட அறிவினாலும் முழுமையான பலன் ஏற்படமுடியாது. ஆனால் இவ்விடயத்தில் நலல பலனை அடைவதற்கு செய்தித்தாள் ஒரு சிறந்த கருவியாகும் என நான் கருதுகிறேன். சகலதர மக்களுக்கும் வசதியாக அமையும் செய்தித்தாள் மூலம் இப்பணியைச் செய்வதனால், பெரும்பகுதியினரால் வீதி ஒழுங்கு விதிமுறை பற்றிய அறிவை, கண்டு, கேட்டு, மற்றவர்களுடன் பேசி, விவாதித்து வளர்த்துக் கொள்ள முடிவது மட்டுமல்லாமல், மீட்டுப்பார்க்க வாய்ப்பாக அவற்றைப் பத்திரப்படுத்தியும் வைத்துக் கொள்ளலாம்.

எனவே, இது விடயத்தில், நமது தினசரியாகிய 'முரசொலி' இதழ் மூலம் ஒரு தொடர்ச்சியாகவேனும் வீதி விதிமுறைகள் பற்றி விபரமாகப் பிரசுரித்து எமது மக்களின் வீதி நடமுறை அறிவை வளர்த்து, விபத்துக்களுக்கு முற்றுப்புள்ளியிட உதவுவீர்களா?

மருத்துவபீடம், டாக்டர் க. சிவபாலன்
யாழ்ப்பாணம்

### வீதியைசெப்பனிட்டமணல் களி; தூசியினால் கிராமவாசிகள் அவதி

ஆசிரியர்
முரசொலி

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி அதிக காலமாக பாழடைந்த நிலையில் இருந்து தற்சமயம் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. ஆனால் ஒரு காலமும் எந்தவொரு வீதி திருத்தும் தேவைக்கும் பயன்படுத்தப் படாத மனல் களியை தற்சமயம் ஒப்பந்த காரர் தமது லாபம் கருதி குடத்தனை வீதிக்குப் பயன்படுத்தியுள்ளார். இதனால் வீதியோரங்களில் வசிக்கும் மக்களும், இவ்வீதியால் பிரயாணம் செய்வோரும் மணல் தூசியினால் பெரிதும் பாதிக்கப் படுகின்றனர். ஆகவே இந்த வீதிக்கு உரிய மேலதிகாரிகள் நேரில் பார்வையிட்டு கிராம வாசிகளின் நிலைமை அறிந்து உதவ முன்வருமாறு வேண்டுகின்றார்கள்.

குடத்தனை வ. தவராசா


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 |  | 24 |
| 04 | | 04 |
| 1946 | | 1987 |

### திருமதி யோகலட்சுமி பாலசுப்பிரமணியம்

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், முன்னாள் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் அமரர் நடராசா பாலசுப்பிரமணியத்தின் துணைவியாருமாகிய திருமதி யோகலட்சுமி பாலசுப்பிரமணியம் ஆசிரியை அவர்களின் ஞாபகார்த்தமாக இன்று பிரார்த்தித்து திதிக்கடன் செய்கின்றார்கள் அன்னாரின் பிள்ளைகளான.

வாசுகி, பாலகி, பாலமுரளி, வைதேகி

04203

'குவைத்ரைம்ஸ்' தரும்தகவல் இது;

# குவைத்தில்பணிபுரியும் இலங்கைப்பெண்கள் மீது பயங்கரசித்திரவதைகள்மேற்கொள்ளப்படுகின்றன

குவைத்தில் பணிப் பெண்களாக உழைக்கச் சென்றபல இலங்கை அழகிகள் சித்திரவதைப்படுகின்றனர்.

உயிர்பிழைத்து ஊர் திரும்புவோமோ என அஞ்சியஞ்சிச் சாகின்றனர்.

சில இடங்களில் சம்பளம் கேட்டால் அடி உதை தீய்ச்சூடு, இரும்புக்குழாயால் தாக்குதல், பல இடங்களில் கொடூர சித்திரவதை.

இபபடிப் பல பெண்கள் அவஸ்த்தைப் படுகின்றனர். இலங்கைத் தூதரகத்திற்கும் சென்று முறையிடுகின்றனர்.

குவைத் நாட்டுரைம்ஸ் பத்திரிகைச் செய்திப்படி தினம் 40 பேர் இலங்கை தூதரலுவலகம் சென்றுமுறையிடுவதாக அறியமுடிகின்றது.

பல வீட்டுப் பணிப் பெண்கள் பைத்தியக்காரிகளாகின்ற துர்ப்பாக்கிய நிலைமைக்கு வருகின்றனர். எனவும் அங்கிருந்து ஊருக்கு கடிதம் எழுதுபவர்களும் பெண்களின் பரிதாபநிலை கண்டு பரிதாபமாக எழுதுகின்றனர்.

அங்கு பணிபுரியும் யாரும் இவர்களுக்கு துணைபோகமுற்பட்டால் அவர்கள்தமக்கு ஆபத்து என மௌனம் சாதிக்க வேண்டியுள்ளதாம்.

## புனித பிரதேச..... ......

லும் பார்க்கச் சாராய விற்டனைதான் மிக வேகமாக நடக்கிது''—என்றார்.

சனி ஞாயிறு தினங்களில் இரண்டு மணி என்றால் இளைஞர்கள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை போதை தலைக்கேறிய நிலையில்... பிரச்சனைகளை வலித்து தேடிக் கொள்ளும் காட்சிகளைக் காண முடியும்...

சில பெண்கள் கடலிலே குளித்துக் கொண்டிருக்கின்றார்கள்... சிறிது தூரத்தில் ஐந்து இளைஞர்கள் குளிக்கின்றார்கள்... இந்த இளைஞர்கள் குளிக்கும் பெண்களைப் பார்த்து நையாண்டி செய்கிறார்கள்...

### கைகலப்பு

சிறிது நேரம் செல்ல... பெண்களை நோக்கி... இளைஞர்கள் தண்ணீர் பாய்ச்சிச் சேட்டை விடுகிறார்கள். கரையோரம் நின்று கொண்டிருந்த பெண்களின் உறவினரோ தெரியவில்லை. இந்த இளைஞர் கோஷ்டிக்கும், பெண்களின் உறவினர் கோஷ்டிக்கும் இடையே... வாய்ச் சண்டை கைகலப்பாகமாறுகிறது...சிலர் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முயலுகின்றனர்.

இளைஞர்களின் வயிற்றுக்குள் புகுந்துள்ள மது அரக்கன்... தனது வேலையைக் காட்டாமல்... விடுவானா... அடி தடி... கூட்டம் கூடுகிறது... கலைகிறது...''

இப்படியான காட்சிகளைக் கீரிமலையில் சனி ஞாயிறு தினங்களில் இலகுவாகக் காணமுடியும்.

கீரிமலைக்கு இப்போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் யாழ் நகரம் வருவோர் இறுதியாகக் கீரிமலைக்குப் போய் விட்டுத்தான் ... பயணத்தை நிறைவு செய்கிறார்கள்.

வேறு இடங்களில் இருந்து வருவோர் எம்மைப் பற்றி உயர்வாகக் கணிக்க அவர்கள் புனித பிரதேசத்தைப் புனிதமாய் பேண ... நாம் வழிகாட்டிகளாக இருக்க வேண்டுமே தவிர மற்றவர்கள் எள்ளி நகையாடவும், துஷ்பிரயோகம் செய்யவும் இடமளிக்கக் கூடாது.

தற்போது கீரிமலைக்கு வருபவர்களில் இளம் பெண்களின் தொகையே அதிகம். வயது முதிர்ந்தவர்களின் தொகை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இளைஞர்கள் கீரிமலைக்கு வரும் போது போத்தலுடன் வருவதைப் பழக்கமாக்கி விட்டார்கள். இந்தப் போத்தல் வாலிபர்களால் கீரிமலை யுத்த களமாக மாறி விடுவதும் உண்டு.

கீரிமலையில் வியாபாரம் செய்யும் இளையபிள்ளை ஆச்சி... "இந்த இள வட்டங்களால பெரிய தொந்தரவு... இதுகள் காதல்... கீதல் எண்டு இஞ்ச சுத்தித் திரியுதுகள்... இதுகள் ஒதுக்குப் புறமா ஒதுங்குகிறதப் பார்க்க... சிறுசுகள்...வட்டமிடுதுகள்...... அந்தக் காலத்தில நாங்கள் ... ... எப்படி இருந்த நாங்கள் தெரியுமா?

-(தொடரும்)

## கசிப்பு பெண் உட்பட நால்வர் கைதாகினர்

ஐந்து இலட்சம் ரூபாபெறுமதி வாய்ந்த கள்ளச் சாராயத்தை வென்னப்புவபகுதியில் நீர்கொழும்பு பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வேட்டையின் போது ஒரு பெண்ணும் மூன்று ஆண்களும் கைது செய்யப்பட்டனர்.

கள்ளச்சாராயவடிசாலை ஒன்றையும் முற்றுகையிட்ட பொலிசார் இக்கசிப்பையும் ஸ்பிரிட்டையும் மற்றும் உபகரணங்களையும் கைப்பற்றினர்,

## இன்றைய நிகழ்ச்சிகள்

### நீராவியடியில்

யாழ். சைவ பரிபாலன சபை திருநாவுக்கரசு நாயனுர் குருபூசையைஇன்று 21ம் திகதி சனிககிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடாத்தவுள்ளது. திருநாவுக்கரசு நாயனுர் புராணபடனம், திருமுறை ஓதுதல், 'நாவுக்கரசரின் நற்பணி' உபந்நியாசம், பூசை, மாகேஸ்வர பூசை என்பன இக் குரு பூசையில் இடம் பெறவுள்ளன.

### ஆனைக்கோட்டையில்

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசையும், பரிசளிப்பு விழாவும்இன்றுசனிக்கிழமைபிற்பகல் 2.30 மணிக்கு ஆனைக் கோட்டைமூத்தநயினர் கோவிலில் நடைபெறவுள்ளன. தமிழ்த்துறை விரிவுரையாளர் க. நாகேஸ்வரன்' நாவுக்கரசரும் திருத் தொண்டும் என்னும் பொருள் பற்றிசொற்பொழிவாற்றுவார்.

## ஆற்றலாளர் அரங்கு



சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவனுன, நயினதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட 19 வயது நடேசபிள்ளை சுபநேசனை சந்தித்தபோது பரீட்சையில் சித்தியடைந்த திருப்தி ஒன்று அவர் முகத்தில் தெரிந்தாலும் சந்தோஷம் இல்லாத ஓர் விரக்தி அவர் பேச்சில் பிரதிபலித்தது. கச்சேரி கார் குண்டு வெடிப்பின் போது ஏற்பட்ட காயத்தால் இடது கண் பார்வையினை இழந்து, உடல், உள ரீதியான பாதிப்புகளை சந்தித்திருக்கும் இந்த இளைஞன் தன் கருத்துக்களை இப்படித் தெரிவித்தார்.

கடந்த கால நாட்டு நிலைமைகளால் பெருமளவு பாதிக்கப்பட்டேன், என் உடலில் ஏற்பட்ட காயத்தின்போது நான் உயிருடன் இருப்பேன் என்ற நம்பிக்கையே எனக்கிருக்கவில்லை. சிகிச்சைக்கு இந்தியா சென்ற போது 3 மாதமாக கல்வி தடைப்பட்டது உடல், உள ரீதியான பாதிப்புகள் ஏற்பட்ட பின்னரும் படிக்க வேண்டும் என்ற ஆசையில் என் கல்வியைத் தொடர்ந்தேன். நண்பர்கள் எனக்கு பாடக்குறிப்புகளைபிரதி பண்ணித் தருவதில் உதவியாக இருக்க, என் தந்தையும் சகோதரியும் அவற்றைப் படிக்க நான் கிரகித்துக் கொள்வேன். என் கண்களைப் பாதிக்கும் என்பதால் 6 மாதமாக இவ்வாறே படித்தேன். இது மட்டுமா...... பிறகு சுமூக நிலைக்கு வந்த பின்னர் என்னுடன் ஒன்றாக இருந்து படிக்க சக வகுப்புத் தோழர்களை இழந்தது என்னை அதிகம் பாதிப்புக்கு உட்படுத்தியது இத்தகைய நெருங்கியவர்களின் சாவுகள் பலவற்றை நான் சந்தித்திருக்கின்றேன்.

வாழ்வில் அனுபவிப்பதற்கு இனி என்னிடம் எதுவும் இல்லை என்றளவிற்கு நான் கஷ்டங்களை அனுபவித்து விட்டேன். இப்படி என்னால் மீண்டும் என் படிப்பைத் தொடரக் கூடிய சாத்தியம் ஏற்படும் என நான் நினைத்திருக்கவில்லை. இருந்தும் எத்தனையோ பேர் இரு கண்களை இழந்து வாழும் போது நான் ஒரு கண்ணைத்தானே இழந்தேன். என் பாடசாலையில் கூட கண்ணை இழந்த ஆசிரியர் இருக்கின்றார். எனவே எனக்கு ஒரு கண் இருப்பதே சந்தோஷம் அந்த நம்பிக்கையில் என் கல்வி சிதைவடையாமல் படித்தேன்.

என் தந்தைக்கு நான் டாக்டராக வேண்டும் என்ற ஆசை. எனக்கு ஒரு மருத்துவப் பேராசிரியராக வேண்டும் என்ற இலட்சியம். மேற்படிப்புக்காக வெளிநாடு செல்ல வேண்டிவரினும் மீண்டும் என் சேவையை தாய் நாட்டிற்கே அளிப்பேன். இப்படிக்கூறிச் சென்றவர்கள் பலர் மீண்டும் திரும்பாமலே உள்ளனர். ஆனல் இது என்னைப் பொறுத்தவரை வெறும் வாக்குறுதி அல்ல. கொழும்பு போன்ற இடங்களிலே எமக்கு இடமில்லை. அன்னிய நாட்டில் போய் அடிமைப்பட்டு வாழ என்னால் முடியாது.

எமது நாட்டு சூழ்நிலையில் நமது பாடசாலைக் கல்விமுறை பலவழிகளாலும் பெருமளவு பாதிக்கப்பட்டது இந் நிலையில் பாடசாலையை பிழைகூற முடியாது. இந்நிலையில் மாணவர்களுக்கு பெரிதும் கை கொடுத்தது டியூசன் கல்விமுறையே. நண்பர்களின் இழப்பிற்குப் பின்னர் பாடசாலைக்கு செல்லவே மனம் ஏற்படுவதில்லை சென்றாலும் படிக்கவே மனம் வராது. இந் நிலையில் மனம் சிறிது ஒரு வழிப்படடு கல்வியில் கவனம் செலுத்த டியூசன் கல்வி பெரிதும் உதவியது. ஆனாலும் எமது பாடசாலை எமது கல்விக்கு ஆற்றிய சேவையினை மறக்க முடியாது.

சமீபகாலப் பிரச்சனைகளால் நான் கொழும்பு போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்திருந்தால் என் நோக்கமும் மாறி என் கல்வியும் பாதிக்கப்பட்டிருக்கும், நல்லவேளை வீட்டோடு இருந்து சிரமங்களைக் கடந்து படித்துவிட்டேன் (நிம்மதிப் பெருமூச்சு ஒன்று இவரிடம் வெளிப்பட்டது)

எமது கல்வி முறையில் மாற்றங்கள் உண்டாக்க வேண்டும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கல்விப்பயிற்சி வழங்கப்பட வேண்டும். கருத்தரங்குகள் என்பனவற்றின் மூலம் மேலதிக கல்வியை அளிக்கும் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

கல்வியைத் தொடர முடியாதவர்களும்,தோல்வியடைந்தவர்களும் மனம் தளரக்கூடாது அதிக நேரம் படிப்பதால் தான் அறிவு வளரும் என்பதில்லை. எல்லாம் நாம் கிரகிக்கும் தன்மையில் உள்ளது. நம்பிக்கை வைத்து ஒரு இடத்திலே டியூசன் கல்வியைக்கற்க வேண்டும் என்று கூறி தன் கருத்துக்களை கூறிய இவர், தான் காயமுற்ற போது தன்னை புகைப்படம் எடுத்து உதவிய முரசொலிக்கு தன் நன்றியைத் தெரிவித்தார். இவரையும் முரசொலி இனிதே வாழ்த்துகின்றது.

## நகர சுத்திகரிப்பு வாரத்தில் மக்களுக்கு அறிவுரை

சுற்றாடல் துறை அமைச்சு நடத்தவிருக்கும் நகர சுத்திகரிப்பு வாரம் மே 30-ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. இச் சுத்திகரிப்பு வாரத்தில் அரசு, மற்றும் தனியார்துறை நிறுவனங்களும் பங்கு கொள்ளவிருக்கின்றன.

இந்த விசேஷ வாரத்தின் போது ஏற்பட்டாளர்கள் வீதி வீதியாகச் சென்று நகரத்தையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருப்பது எப்படி என்பது குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பார்.

ஆரம்ப வேலையாக கொழும்பு நகர வீதி ஒன்று தெரிவுசெய்யப்படவிருக்கின்றது. இந்த பரீட்சாத்த நடவடிக்கையின் அனுகூலங்களைப் பொறுத்து இந்த நடவடிக்கை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் படிப்படியாக விஸ்தரிக்கப்படவுள்ளது. வீடுகள், உணவு விடுதிகள், சந்தைகள், சாப்பிடும் இடங்கள் போன்றவற்றிலிருந்துஏற்படும் கழிவுகள் பெருமபாலும் வீதிகளிலே கொட்டப்படுகின்றன. இவை காலதாமதமின்றி அகற்றப்பட வேண்டும் என்பது குறித்தே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## கி. லஷ்மணஐயர் காலமானர்

முன்னாள் கல்வித்திணைக்கள வித்தியாதிபதியும் ஆலோசகருமான தமிழறிஞர் கி. லஷ்மண ஐயர் அவுஸ்திரேலியா-சிட்னியில் கடந்த திங்கட்கிழமை மரணமானர். தத்துவ முதுமாணி பட்டதாரியான இவர் அரசகரும மொழித் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பு அத்தியட்சகராகவும் பணியாற்றியவர்.

## கிளிநொச்சி கச்சேரி

# கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சிக் கச்சேரி, திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் கீழ்க் காட்டப்படும் கட்டிட வேலைக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1990-ம் ஆண்டு மே மாதம் 07-ந் திகதி நண்பகல் 12 00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேவைப்படும் பதிவுத்தொகை மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம், மீளப்பெறமுடியாத கொடுப்பனவு ஆகியன கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல | வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத்தொகை ரூபா | மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம் ரூபா | மீளப்பெறமுடியாத கொடுப்பனவு ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கிளிநொச்சி, கச்சேரி பெண் ஊழியர்களுக்கான விடுதி அமைத்தல் | 800,000.00 | 500.00 | 250.00 |

இவ்வேலைக்குரிய கேள்விப் பத்திரப் படிவங்களை மீளப்பெறக்கூடியதும், மீளப்பெற முடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1990-04-30-ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்
திணைக்கள கேள்விச்சபைத் தலைவரும்,
மாவட்ட ஆணையாளரும்,
அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி.
கிளிநொச்சி.
1990-04

04199

### உயர்வுக்கு உறுதுணை விநாயகர், முருகன் எனும் பக்துவம்

# ஆன்ற இசைஞானம் அளித்த

# மாட்சியின் சின்னமாக இவர்

நாதஸ்வர வித்துவான் கே ஆர் சுந்தரமூர்த்தி அவர்களின் 35 வருடகால இசைத்துறை சேவையப் பாரட்டி இணுவில் மஞ்சத்தடி ஸ்ரீஅருணகிரி நாதஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் இன்று விழா ஒன்றினை விரிவான வகையில் ஏற்பாடு செய்துள்ளது. இதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது

பிரபல நாதஸ்வரக் கலைஞர் கலாநிதி இணுவையூர் திரு இரா. சுந்தரமூர்த்தி அவரது மாமனார் கோதண்டபாணியின் வாசிப்பின் தூண்டுதலினால் இசை உலகில் அடி எடுத்து வைத்தவர். இக்கலைஞரின் திறமைக்கும், வளர்ச்சிக்கும் இவரது தந்தை மதுரை திரு. மங்கலம் கருப்பையா இராசு அவர்களின் நாதஸ்வரப் புலமையும், இவரது தாயாரின் தந்தையான சங்கரப்பிள்ளை விசுவலிங்கம் அவர்களின் வழி வந்த இசை ஞானமுமே அடிப்படையாக இருந்திருக்கின்றது இவருக்கு இவரது இசை உலகில முன்மாதிரியாக இருந்தவர்கள் பலர். அதில், இவரது மாமனார் பல்கலை வித்துவான் ருத்ராபதி நாதஸ்வர வித்துவான் கோதண்டபாணி, பல்கலைஞர் மாசிலாமணி மகாவித்துவான் தெட்சணாமூர்த்தி ஆகியோர் குறிப்பிடத்தக்கோரில் சிலர்.

நாதஸ்வரக் கலையால் இக்ருக்கு முதற் குருவாக கோண்டாவில் வ. நாராயணசாமி அவர்கள் இருந்துள்ளார்கள். அதன் பிற்பாடு இவரது பெரிய மாமனார் வி. உருத்திராபதி அவர்களிடமும், அதனைத் தொடர்ந்து மாவிட்டபுரம் நாதஸ்வர வித்துவான் எஸ். கே. ராசாவிடமும் தனது கலையைச் செம்மைப் படுத்திக் கொண்டார்.

இவருக்கு 10 வயது வரை இவரது குடும்ப சூழநிலையே இவரது இசைப் புலமையை வளர்த்தது. அதன் பிறகு இவரது 12 வயதில்தான் இவரின் குருகுல வாழ்வு ஆரம்பமானது.

ஆத்மார்த்தமான ரீதியில் மன நிறைவையும், இறையுணர்வையும் பெற்றுள்ள இவருக்கு வாழ்வில் மறக்க முடியாத பல அனுபவங்கள் இருக்கின்றதாக குறிப்பிடும் இவர், 1982-ம் ஆண்டளவில் இந்தியா சென்றபோது இணுவையூர் தவில் வித்துவான் என். ஆர். சின்னராசா மூலம் இந்தியாவில்உள்ள சமயபுரம் மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற திருவிழாவிற்கு திருவாவடுதுறை இராஜரத்தினம்



திருபிள்ளை வெண்காடடுசுப்பிரமணியப்பிள்ளை ஆகியோருடன் மேடையேறி 8 மணித்தியாலயம் தொடர்ந்து நாதஸ்வரம் வாசித்ததை என்றுமே மறக்க முடியாத சம்பவமாகக் கருதுகின்றனர்.

இசையைத் தெய்வமாகக் கருதி வாழ்வதால் 72 மேளகர்த்தா இராகங்களையும் பிடித்ததாகக் கூறும் இவருக்குக் குடும்ப வாழ்வும், பொருளாதார நிலையும் சீராக இருப்பதாலும், அமைதியான வாழ்வை இயல்பாக விரும்பும் மன இயல்பினை அவரது தாய் ஊட்டி வளர்த்தமையினாலும் வெளிநாடு போவது பற்றி இவர் நினைக்க விரும்பவில்லை அதோடு இவரது முன்னேற்றத்திற்குத் துணையாகக் கம்பனைப் பிள்ளையாரும், மஞ்சத்தடி முருகனும் முதற் கண்ணாகஉள்ளனர். தினமும் ஆலயம சென்று இவர்களின் திருப்பாதம் தொழுவது இவரது நித்திய கடமை. வெளிநாடுபோவதால் இப்பேறு கிடைக்காமல் போய்விடும் என்பதோடு இனிமையாகப்பழகும் நண்பர்களையும், உறவுகளைப் பிரிவதும் இவரால் முடியாத தொன்றே!

இவருக்கு ரசிகையாக இருந்து ஊக்கமளிப்பதில் முன்நிற்பவர் இவரது மனைவி ஆவார். மனைவியின் சகோதரர்களான கானமூர்த்தி-பஞ்சமூர்த்தி சகோதரர்களும் இவரது வளர்ச்சிக்கு ஊற்றாக உள்ளனர்.

மேலும் – இவரது மகன் கேபிதாசும் ஒரு இளம் கலைஞர். இவரது மகனின் குருவாக இவரது தாய்மாமன் மகன் வயலின் வித்துவான் உருத்திரா-இராதா கிருஷ்ணனும், இவரது தம்பி பிரபல தவில் வித்துவான் புண்ணியமூர்த்தியும உள்ளார்கள்

இத்தகைய பிரபல கலைஞரின் குடும்பமே ஒரு கலைக்கலஊரி-இணுவில், கோண்டாவில், அளவெட்டி என்று கொடிகட்டிப் பறக்கும் இசைப் பரம்பரையின் ஈடில்லா நாதஸ்வரக் கலைஞர் கலாநிதி இரா. சுந்தரமூர்த்தியவர்கள் என்றும் சிறப்புக்கும், கீர்த்திக்கும் உரியவர். ஊரும், நாடும் போற்றும் இந்த உயர்ந்த கலைஞர் எல்லோர் அன்புக்கும் வாழ்த்துக்கும் உரியவர்!

### ஜி. சி. ஈ. பரீட்சை

## மே- 14 விண்ணப்ப இறுதி திகதி என அறிவிப்பு

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான இறுதித்திகதி மே மாதம் 14-ம் திகதி என்று அறிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன, பாடசாலை ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைகககலாம் என்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

விண்ணப்பங்களை முன்கூட்டியே அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.


## அறிவித்தல்

இரசாயனவியல் திரு. மகாதேவா அவர்களது வகுப்புக்கள் மீண்டும ஞாயிறு 22.04.1990 முதல் வழமைபோல் நடைபெறும் என அறியத் தருகிறோம்.

- **BOND INSTITUTES**
  யாழ்ப்பாணம்
- **NAGALINGAM INSTITUTES**
  திருநெல்வேலி
- **வாணி கல்வி நிறுவனம்**
  சுன்னாகம்

04204


### புங்குடுதீவில் நினைவஞ்சலி

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினரும்வீரமரணமுற்றவருமான புங்குடுதீவைச் சேர்ந்த மனோரஞ்சனது மூன்றுவது ஆண்டு நினைவஞ்சலி வைபுவம் புங்குடுதீவு ஊரைதீவு சந்தியில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் மக்கள்முன்னணியின் தீவக அரசியற் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ கலந்து கொண்டு அஞ்சலியுரைநிகழ்த்தினார். மனோரஞ்சனது நினைவாக ஊரைதீவுச்சந்தியில் பஸ் தரிப்பு நிலைய மொன்றிற்கு அடிக்கல் நாட்டும் வைபவமும் இடம் பெற்றது. (24)

## ரமழான் சிந்தனைகள்

### பாவங்களை அழிக்கும் தர்மம்

"நெருப்பைத் தண்ணீர் அணைப்பது போன்று பாவங்களை தர்மம் அழித்து விடும்" என்று நபி (ஸல்) கூறினார்கள்.

"தர்மத்தினால் பொருள் குறைந்து விடாது. மன்னிப்பு அளிப்பதினால் சிறப்பு குறைந்து விடாது" என பெருமானார் (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

"தன்னுடைய நன்கொடையைத் திரும்பப் பெறுபவர் நாயைப் போன்றிருக்கின்றார். அது தான் சாப்பிட்டதைக் கக்கிவிட்டு பின்னர் அதனையே மீண்டும் தின்று விடுகிறது இத்தகைய தீய உதாரணம் நமக்காக வேண்டாம்" என்று நபி அவர்கள் இயம்பியுள்ளார்கள்.

## இன்று நாள் எப்படி?

மேடம்: பெரியோராசி, உயர் பதவி, வாகன சுகம், தேடியவர் வருகை, பணவரவு.

இடபம்: திடீர்ப் பிரயாணம், சகோதர வழியுதவி, விவாக நிட்சயம், வணிகர்கள் இலாபம்.

மிதுனம்: உடல்ரோகம், வீண் செலவு, வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

கடகம்: விவாக நிச்சயம், வாக்கு வசீகரம், பணப்புழக்கம், தேடியவர் வருகை.

சிங்கம்: சுகஜீவியம், சகோதர வழியுதவி, எண்ணியது நடக்கும், திடீர்ப்பிராணம், புதுத் தொழில்.

கன்னி: விவாக நிச்சயம், மனையிற் சுபகாரியம், ஆடை ஆபரணச் சிறப்பு, அன்னியருதவி.

துலாம்: உயர் பதவி, கல்வியாற் தொழில், பிரிந்தவர்கள் ஒன்று சேருதல், வாகன சுகம்

விருச்சிகம்: தேடியவர் வருகை, வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

தனுசு: விவாக நிச்சயம், உயர்பதவி, உத்தமர் உறவு, சுகஜீவியம், பணவரவு.

மகரம்: வாக்குப்பலிதம், கல்யாற் சுகம், பிரிந்த சாதலர் ஒன்று சேருதல், வணிகர்கள் இலாபம்.

கும்பம்: கல்வியாற் தொழில் காதலர் மகிழ்ச்சி, வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் மூலம் இலபம் பம்.

மீனம்: சுகஜீவியம், பணவரவு, விவாக நிச்சயம், தேடியவர் வருகை, இளைய சகோதர வழியுதவி.

★ யாழ் சோதிடர்
ச. அரியநாயகம்

### சைவப்புலவர் தங்கரத்தினம் உரை

## இளைஞர் மனறத்தின சேவையை இளைஞர் பயன்படுத்த வேண்டும்

'மனித வாழ்க்கையில் இளைஞரின் பருவமானது மிகச் சிறப்பானது உடல், உள, விவேக வளர்ச்சிக்குப் பெரும் வாய்ப்பானது இந்தப் பருவ காலத்தை நன்றாகப் பயன்படுத்தி இளைஞர்கள் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இளைஞர்களே ஒரு நாட்டின் எதிர்காலச் சிற்பிகள். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இந்நாட்டுக்குச் செய்யும் சேவை உலக சேவையாகப் பரிணமிக்கிறது. அப்பொழுது தான் உலக சமாதானமும் சுபிட்சமும் மலரும்'

சித்தங்கேணி கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய சமாதான நீதவான் திரு. கி. வைரமுத்து மேற்கண்டவாறு கூறினார்

மன்றத்தலைவர் திரு பி. ரி. கஜேந்திரன் தலைமையில் சித்தன்கேணி கலைநகர் நேருஜி கி. அ சங்க முன்றலில் இக் கூட்டம் நடைபெற்றது.

சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் அதிபர் உரையாற்றும்போது 'எமது கிராமத்தின் கிராமசேவை அலுவலர் காலஞ்சென்ற ஆ முருகேசுவையும் விசேட சேவை அதிகாரி திரு வே. த. கதிர்காமநாதனையும் நாம் என்றுமே மறக்கமுடியாது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தை எல்லாக்கிராமங்களிலும் அமைக்கமுடியாது. இங்கு அமைந்திருந்தும் இதைச் சரியான முறையில் இயக்கி கிராமத்திற்குக் கிடைக்கவேண்டிய பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ளாதது கிராம இளைஞர்களின் கவனயீனமேயாகும் இம்மன்றத்தில் ஈடுபடும் இளைஞர்கள் கிராம வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து சேவையாற்ற வேண்டும்' என்றார்

உதவி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி செல்வி ஜே பொன்னுத்துரை பிரதம விருந்திராகக் கலந்து கொண்டார். (12)

### இன்று

அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் மண்டபத்தில் இந்து இளைஞர் மன்றத்தினால் அப்பர் சுவாமிகளின் குருபூசை இன்று கொண்டாடப் படவுள்ளது, பிற்பகல் 4 மணிக்கு விசேட பூஸசயும், பஜனையும் நடைபெற்று மாலை 6 30 மணிக்கு தல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் முத்தமிழ் மாமணி பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்த சர்மா "திருநாவுக்கரசர்" என்னும் பொருள் பற்றி ங்கீத கதாப் பிரசங்கம் சநிகழ்த்துவார்.

# மக்கள் வங்கிக்கிளையில் நாளை வீடு புனரமைக்க நிவாரணம்

மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளையில் நாளை ஞாயிறு காலை எட்டரை மணிமுதல் ஒரு மணிவரை வீடு திருத்துவது புனரமைப்பதற்கான நன்கொடைப்பணம் வழங்கப் படும்.

கரவெட்டி, ஊர்காவற்துறை, தெல்லிப்பளை [துர்க்காபுரம்), யாழ்ப்பாணம் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இதுவரை நிவாரணப்பணத்தைப் பெருத கரவெட்டி, ஊர்காவற்றுறை உ. அ. அ. பிரிவினரும் கிராம சேவருடன் தொடர்பு கொண்டு தமது வங்கி பதிவு இலக்கத்துடன் வருமாறும் மக்கள் வங்கி கேட்டுள்ளது.

# ஹாட்லி மெதடிஸ்த அனுமதி 6-ம் ஆண்டிற்கு புதிய பரீட்சை

வடமராட்சியின்முன்னணிப் பாடசாலைகளான பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிகளுக்கு 1990-ம் ஆண்டு மாணவர்களை 6ஆம் ஆண்டில் அனுமதிப்பதற்கான பிரவேசப் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இவ் அனுமதிப் பரீட்சையாக நடாத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்ததையடுத்து பகிரங்கப்பரீட்சையாக நடாத்தப்படவுள்ளது.

அண்மையில் வெளியான 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இக்கல்லூரிகளில் அனுமதி பெறவிரும்பும் மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் 25-ம் திகதி (25.04.90) அவ்வக் கல்லூரி அதிபர்களைச் சந்திக்குமாறு கல்லூரிகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இக் கல்லூரிகளை முதலாவது தெரிவாகத் தெரிவு செய்தமாணவர்களுக்குப் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றபுள்ளிகளின் வரிசையில் அனுமதி வழங்கப்படவுள்ளது இதன் பின்னர் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இம்மாதம் 30-ம் திகதி பகிரங்கப்போட்டிப்பரீட்சை நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்கு தோற்றக்கூடியதகுதி பெற்றவர்கள் 15ரூபா கட்டணமாகச் செலுத்தி இம்மாதம் 28ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கவேண்டியதில்லை. இப் பரீட்சைகள் சம்பந்தமாக ஏற்கனவேபத்திரிகைகள் வாயிலாகக் கொடுக்கப்பட்ட விளம்பரங்கள் செல்லுபடியற்றவை எனவும் அதிபர்கள் அறிவித்துள்ளனர். [15]

# வடமராட்சியில் நிவாரணம்

ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவுகள் இன்று உடுதுறை முள்ளியன் கிராம சேவகர் பிரிவுக்கு பருத்தித்துறை வங்கிக் கிளையிலும் கரணவாய் வடக்கு,கரவெட்டி மத்தி கிராம சேவகர் பிரிவுக்கு நெல்லியடி வங்கிக் கிளையிலும் நிவாரணம் வழங்கப்படும்,

நாளை மருதங்கேணி, செம்பியன் பற்று கிராம சேவகர் பிரிவுக்கு பருத்தித்துறை வங்கிக் கிளையிலும், கரவெட்டி வடக்கு, கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு கரணவாய் கிழக்கு, உடுப்பிட்டி உடுப்பிட்டி வடக்கு, வல்வெட்டி, கரணவாய் வடக்கு, கரணவாய் மத்தி, இமயனன், கரவெட்டி மேற்கு, கரவெட்டி மத்தி, கரவெட்டி கிழக்கு, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு, துன்னாலை மேற்கு, அல்வாய் தெற்கு, அல்வாய் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுக்கு நெல்லியடி வங்கிக் கிளையாலும் நிவாரணம் வழங்கப் படும்.

# பரீட்சை விடைத்தாள் திருத்தம் வேலைகள் இன்று ஆரம்பம்

க. பொ. த. சாதாரணதர பரீட்சை விடைத்தாள்களின் திருத்தும் வேலைகள் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகின்றன.

எதிர்வரும் 23-ம் திகதியே இது ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்விடைத்தாள்கள் யாழ் இந்துக்கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, கனகரட்னம் மத்தியமகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளில் திருத்தப்படும் [03]

# ஆளுநர் நளின் பாதுகாப்பின்றி கீரிமலைக்கு நேரில் விஜயம்

நேற்று மாலை வடகிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவரட்ன தமது பாரியார் சகிதம் பாதுகாப்பு எதுவும் இன்றி காரில் கீரிமலைக்கு வந்திருந்தார்.

இந்திய, இலங்கை இராணுவங்களினால் இப்பகுதியில் ஏற்பட்ட சேதங்களை ஆளுநர் பார்வையிட்டார். புனர்நிர்மாண வேலைகளை துரிதமாக மேற்கொள்ளும் முகமாகவே தாம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

## காலமானர்

### திரு. கி.லக்ஷ்மணஐயர்

இளைப்பாறிய கல்விப்பணிப்பாளரும், கொழும்பு றோயல் கல்லூரி முன்னாள் ஆசிரியருமான திரு? ஓ' லக்ஷ்மணஐயா 13-04-90ல் அவுஸ்திரேலியாவில் காலமானர் அன்னர் பாலம் லக்ஷ்மணனின் அன்புக் கணவரும் சிவராமன், சசிதரன், மங்களம் ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் உமா, ராஜேஸ்வரி, ஸ்ரீனிவாசன் ஆகியோரின் மாமனாரும் ஆவர்.

No. 1, Nobla Place
Telopea
NSW 2117
Australia

தகவல்;
சிவராமன்.

04206

விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயா

# திருமலை பறிபோவதற்கு அனுமதிக்க மாட்டோம்

"திருகோணமலை எமது பாரம்பரிய பிரதேசம் திட்டமிட்ட குடியேற்றங்களினால் எமது இப் புனித பூமி பறிபோவதற்கு நாம் இனியும் அனுமதிக்க மாட்டோம்" என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு. கோ மகேந்திரராஜா (மாத்தயா) திருகோணமலை முற்ற வெளி மைதானத்தில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"வட,கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்பது அங்கீகரிக்கப்படும் வரை எமது பிரச்சனைக்குத் தீர்வு இல்லை" என்றும் அவர் இங்கு திரண்டிருந்த பல்லாயிரக்காணக்கான மக்கள் கூடியிருந்த இக் கூட்டத்தில் சூளுரைத்தார்.

"திருகோணமலை எமது பாரம்பரிய பிரதேசமாக இருந்தும் கூட இம் மாவட்டத்திற்கு ஒரு தமிழர் அரசாங்க அதிபராக இருந்ததில்லை செயலகத்தில் 90 விதம் சிங்களு உத்தியோகத்தர்களே பணிபுரிகின்றனர்' என்று கூறிய அவர் தமிழ்ப்பிரதேசத்தில் இத்தகைய நிலை இனியும் நிலவ அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியுடன் உரைத்தார்.

# தொழிலாளர் ஓவியக்கண்காட்சி

எதிர்வரும் மேமுதலாம் திகதி தொழிலாளர் தினத்தை முன்னிட்டுயாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் ஓர்ஓவியக்கண்காட்சி நடாத்தப்படவிருக்கின்றது.

இவ் ஓவியக்கண்காட்சியின் தொழிலாளர் தினத்தை பிரதிபலிக்கும் ஓவியங்களே எதிர் பார்க்கப் படுகின்றன என்றும் ஓவியங்கள் யாவும் 30 04 90 ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக யாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலகம் கோண்டாவில் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ராஜன் தெரிவித்துள்ளார்.

## ஜெயவர்தன காலமானர்

ஜனதிபதி வழககறிஞரும் முன்னாள் ஜனதிபதி ஜெ ஆர் ஜெயவர்தனவின் சகோதரருமான எச் டபிள்யு ஜெயவர்தன நேற்று பங்களூரில் காலமானர்.

1985 இல் திம்பு பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை அரசின் பிரதிநிதியாக இவர் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது.

## ரெலிபோன்...

கப்படுகிறது.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட 150 தோணிகளில் 30 தோணிகள் கல்முனை மாவட்டத்திற்கு வழங்கப்பட வேண்டும் என மாகாணசபை அதிகாரிகளால் தொலைபேசி மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டதாம் ஆனல் எழுத்து மூலமாக இதுவரை அத் தோணிகளை கல்முனை மாவட்டத்திற்கு வழங்குமாறு மட்/கச்சேரிக்கு அறிவிக்கப்படவில்லையாம்.

இதனல் மேற்படி 30 தோணிகளும் மட் / கச்சேரி வளவினுள் இவை அடுக்கி வைக்கப்பட்டுள்ள என தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியப்படை...

தேச சபை கணக்கிட்டிருந்தது

இத்தொகையை செலுத்துவது தொடர்பாக நிலவிய இழுபறியை அடுத்து இத்தொகையை கட்டுவதற்காக பாதுகாப்பு அமைச்சு முன்வந்தது கிளிநொச்சி அரச அதிபரின் முயற்சிகளை அடுத்தே இத்தொகையை பொறுப் பேற்க அமைச்சு மூன்வந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்...

போது.

தனது அப்பாதான் பிற்பொக்கட் அடிக்கும்படி அனுப்பியதாகவும் அப்பாவும் தன்னுடன் தந்து மாயமாக மறைந்துவிட்டார் என்றும். தன்னுடன். 15 பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டுவருவதாகவும், நேற்றுமுன்தினம் யாழ்புகையிரதத்ல் 7 ஆயிரம் ரூபா எமது குழுவினர்களில் ஒருவர் கொள்ளையடித்ததாகவும், தெரிவித்தார்

இவரது தகப்பன் பெயர் காந்தி இவரது பெயர் ரூபன் வயது 10 வவுனியாவில் வசிப்பவர். (03)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலி



### செல்வி தனுஷா தளையசிங்கம்

தோற்றம் 06-05-1988 மறைவு 22-03-1990

பிள்ளைக் கலிதீர்க்கப் பெற்றேம் பெரும்பேறுய்
உள்ளம் களிக்கும் உருவச்சீர் ஓவிபமே!
தள்ளற் கரியதுயர் தந்தாய் தனுஷாவே
பிள்ளைக் களியமுதே பெற்றேர்யாம்
என்செய்வோம்

வெள்ளி திசையோடு விளைந்தே விழிப்புற்ற
பிள்ளைக் கனியமுதே பேரார் தனுஷாவே!
அள்ளி அணைத்தேயாம் அன்பாக முத்தமிட
தெள்ளு தமிழ்த்தேனே சென்றுவிட்டாய்
என்செய்வோம்

பிரிவாற்ருது பிரலாபிக்குல்
தந்தை தளைய சிங்கம், தாய் பங்கையற் செல்வி
சகோதரர்கள், மாமன்மார், அத்தைமார்
மேத்திமார்கள்

5/1, கனகரட்னம் வீதி
அரியாலை, யாழ்ப்பாணம்

04207

## காலமானர்

### வேலுப்பிள்ளை முருகேசு

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் குருநகரை வசிப்பிடமாகவும், கொண்ட திரு. வேலுப்பிள்ளை முருகேசு நேற்றிரவு காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக்கணவரும், செல்வநாயகம் (ரிங்கர்), நாகராசா (கணக்காளர்) கொழும்பு, வசந்தகோகிலம், லீலாவதி, ஆனந்தராஜா (சுபாஸ் ஹோட்டல்), விஜயருணி, ஜெயராசா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், செல்வமாணிக்கம், அலன் (பிரான்ஸ்), பத்மநாதன், கனகாம்பிகை, ஜெயதேவி, ஆன்வசந்தா, பத்மதேவி, ஆகியோரின் மாமனாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் 22-04-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று துண்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேம்.

111/13, இராஜசிங்கம் வீதி
குருநகர்
யாழ்ப்பாணம்

மனைவி, மக்கள்,
மருமக்கள்

04208

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 76ம் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 21-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது